காந்தமயமலை, காந்தமும் இரும்பும் கலந்து கிடைக்கப் பெற்ற மலை, mountain contaning magnet mixed with iron ores.

காந்தமயம், (காந்தம்+மயம்), influence or predominence of magnetic power; 2. (காந்தம் + அயம்) காந்தமும் இரும்பும் சேர்ந்தது, an alloy of magnet and iron.

காந்த மலை, காந்தம் வெட்டி யெடுக்கும் மலை, mountain wherefrom loadstone is dugout; 2. காந்தமய முனை, magnetic pole.

காந்த மாட்டுதல், காந்த மூட்டுதல், to induce magnetic properties *i.e.* to render a piece of iron magenetic; 2. காந்தத்தை அறைத்தல், to grind loadstone into a powder.

காந்த மின்சாரம், காந்தத்தைக் கொண்டு` மூட்டு மின்சாரம், electricity induced by means of a magnet–Magneto electricity.

காந்த மின்னிராயம், காந்த மின்சார வோட்டம், magneto-electric current.

காந்த மின் னுபகரணம், காந்த மின்சாரக் கருவிகள், magneto-electrical apparatus.

காந்த மூசை, காந்தத்தினாற் செய்த மூசை, a crucible made of magnet.

காந்த மூட்டல், காந்தச் சக்தி கொடுத்தல், inducing magnetism.

காந்தம், இரும்புக் குணமுடைய வோர் உலோகம். இது மற்ற உலோகங்களைப் போலவே பூமியினின்று வெட்டி எடுக்கப்படும். இதற்குத் தான் காந்தச் சிலை அல்லது காந்தக்கல் என்று பெயர். இதற்கு இரும்பை இழுக்கும் சக்தி யுண்டு; நிறம், வடிவு இவைகளைக் கருதி இது அடியிற் கண்டபடி பல வகைப்படும். ஆனால் வடமொழி நூலின்படி இது நான்கு வகைப் படும். இது இயற்கை யாகவே பூமியின் கீழ் உற்பத்தியாகி, இரும்புடன் கலந்து வெட்டி யெடுக்கப்படும். இங்கிலாந்து, ஜெர்மனி, அமெ ரிக்கா, எகிப்து இவ்வி டங்களில் விசேஷமாய் அகப்படும். கல் காந்தத்தினின்றும் அசல் காந்தம் எடுப்பதுண்டு. ஆனால் மின்சார சக்தியினால் காந்த சத்துக் கொடுத்து காந்தம் என விற்கப்படுவது போலிக் காந்தமே ஒழிய வேறல்ல. ஏனெனில், சில காலத்திற்குப் பிறகு, இச் சக்தி நீங்கி இரும்பைப் போலாகும்.

நாட்டு வைத்தியர்கள் இரும்பையும், காந்தத்தையும் சேர்த்து அயக் காந்த செந்தூரம் செய்வார்கள், இது உடம்புக்கு வலிவைக் கொடுத்து ஆயுளை விருத்தி செய்யும். இதை கந்தகத்துடன் கலந்து சயம், பாண்டு இவைகளுக்கும் கொடுப்பதுண்டு. சித்தர்கள் இதினின்று பாத்திரம் செய்து கற்பங் கொள் வதினால் காயசித்தி யடைவார்கள், magnet–Ferri oxidum magne ticum of chemists. This is dug out

from the earth Just like other metals and it is known as loadstone. It has the power of attracting iron. it consists of several varieties as mentioned below according to their shape, colour etc; but according to Sanskrit authorities, It is divided into four kinds as enumerated below. It is found in a natural state in combination with protoxide and peroxide of iron. It is found in large quantites in England, Germany, America, Egypt and other countries. Pure magnet is usually obtained from loadstone; but iron to which is imparted the power of magnet by eterctric current is not a true magent as it loses its virtue subsequently.

Vaidyans mix iron filings with loadstone and prepare calcined powder of red oxide which is said to invigorate the human system and prolong life. They also consider it to possess tonic and de-obstruent qualities and prescribe it with sulphur in cases of consumption and dropsy. Many are the uses of this metal as described in the Siddhars' science. Vessels are even made out of this by Siddhars and used as eating dishes which tend to rejuvenate the system.

1. கல் காந்தம். இது சோகைக்கும் குன்மத்திற்கு முதவும், magnetic iron stone used medicinally in anemia and gastritis.
2. அரக்குக் காந்தம், a red variety of magnet.
3. ஏழு ஊசிக் காந்தம், one having a strong magnetic power to attract seven needles.
4. உருளைக் காந்தம் அல்லது பலவகைக் காந்தம், round magnet.
5. ஒட்டுக் காந்தம் Flat magnet

NOTE–வடமொழி நூற்படி காந்தக் கல் நான்கு வகைப் படும்:– உரோமகம், பீராசிகம், சம்பகம், திராவகம்.

காந்தம் பிடித்த பொடி, காந்தத்தில் ஒட்டியுள்ள பொடி, a mass of soft iron at the extremity of a magnet–Armature.

காந்தயச் சாரி, காய்ப் பூவரசு அல்லது காட்டுப் பூவரசு, which see.

காந்தம் பிடித்தல், காந்தம் இழுத்தல், the attraction of a magnet.

காந்தரச விருட்சம், சோதி விருட்சம். இதில் காந்தம், இரசம் இவைகளின் சக்தியுள்ளதாகக் கருதி இப் பெயர் அமைந்தது போலும். இதின் வெளிச்சத்தினால் இரவு பகல் தோன்றாது. இம் மரம் வாதத்திற்குப யோகப்படு மென்று கருதப் படும், a tree luminous in the dark. It is so called because

of the supposed virtue of this tree as containing the properties of magnet and mercury. It is said that, by its brightness, night and day could not be distinguished and that it is useful in Alchemy.

காந்தரவம், பூமி, earth.

காந்தருவ சுரம், கனவில் விந்து நஷ்டத்தையுண்டாக்கும் ஓர் வகைச் சுர நோய். இதனால் உடம்பு முழுவதும் வீங்கி, பல வீனம், தலைவலி, மதிப் பிரமை, கோபம், பசியின்மை, பெரு மூச்சு, ஏப்பம், விக்கல், அடிக்கடி நீரிறங்கல், கண்களில் மஞ்சள் நிறம் படர்தல் முதலிய குணங்களுடன் பாடுதல், பரியாசம் பண்ணல் முதலிய சின்னங்களையுங் காணலாம், a kind of fever attended with nocturnal emissions. It is marked by swelling all over the body, weakness, headache, hallucination, anger, loss of appetite, sighing, belching, hiccough, frequent discharge of urine, yellow colouration of eyes etc. It is conspicuous by its giving rise to mental affections such as laughing, singing, joking etc. with a sense of suffocation.

காந்தருவ நகரம், ஆகாயத்தில் வசிப்பதாகச் சொல்லப்படும் ஓர் வகை தேவ சாதி, a class of supernals (celestial beauties) supposed to be inhabiting the sky indulging in luxuries.

காந்தருவ பூத நோய், காந்தருவ உலகத்தில் திரியும் பூதங்கள் மனிதர்களைத் தாக்குவதனால் ஏற்படும் நோய். இதன் தூண்டுதலினால் இப் பேய் பிடித்தோர் ஆடல், பாடல், சங்கீதம், கேளிக்கை முதலியவைகளை விரும்பிச் செய்வார்கள், a devilish disease supposed to be caused by the influence of the evil spirit hovering about the Celestial regions of the Gandharvas. It is said that such spirits induce in human beings strange and involuntary gesticulations such as singing, dancing, jesting, joking etc.

காந்தருவ பூதம், காந்தரு வருக்குள்ளுண்டாகும் இச்சைகளை மனிதருக்கும் உண்டு பண்ணுமோர் வித பைசாசம், a demon or devil responsible for imparting to men the ambitions and aspirations of the Gandharvas.

காந்தருவப் புணர்ச்சி, ஆண் பெண் இருவரும் தஙகள் பெற்றோர் அல்லது பெரியோர்களது சம்மத மின்றி தாங்களே ஒருவருக் கொருவர் சம்மதித்துக் கலியாணம் அல்லது வேறு விதமான சடங்கொன்று மாகாமலே புணருதல், sexual intercourse which is brought about by the mutual consent of the male and the female of themselves without the knowledge or assent of their parents or elders in the family.

காந்தருவ மணம், காதலர்கள் இருவரும் தம்முள் மன மிசைந்து கூடுவதனாலேற்படும் மணம். இது

எண்வகை மணத்துள் ஒன்று, one of the eight kinds of marriage contemplated in the Hindu Religious Codes under which the parties themselves bring about marriage on their mutual consent and effect their sexual union without formal marriage or any other usual ceremonial or customary rites.

காந்தருவம், see காந்தருவ மணம்.

காந்த ரூபம், தான்றிக் காய், devil's abode–Terminalia belerica.

காந்த லவணம், ஆயுள் வேத முறைப்படி செய்து வாத ரோகத்திற்குபயோகிக்கு மோர் வகையுப்பு, a medicated salt prepared with magnet according to the process of Ayurveda and recommended by experts for rheumatism and other nervous affections.

காந்த லாடம், குதிரை லாடத்தைப் போற் செய்து காந்த சக்தி ஈட்டிய இரும்பு, horse shoe - magnet.

காந்தலாய்ப் போதல், தீய்ந்து போதல், to become scorched. See காந்துதல்.

காந்த லோகம், காந்தம், magnet (metal); 2. வார்த்த இரும்பு, cast - iron; 3. காந்தமும், இரும்பும், magnet and iron; 4. பூலோகம், Earth which in itself is a Magnet.

காந்தல், உஷ்ணங் கொள்ளல், getting heated in body; 2. உமிக் காந்தல், the heat derived from burning the paddy-husk; 3. தீய்தல், becoming scorched; 4. வெப்பத்தினால் அழற்சி கண்டு உடம்பு இளைத்தல், being reduced or emaciated by the internal heat of the body as a result of inflammation of a particular organ, as the lungs in consumption; 5. நெருப்பின் வெப்பம், "ஒத்தலில் உலை வைத்து காந்தலில் கறி சமைத்தல்", glowing heat of fire as used in the above proverb; 6. முதிர வேகுதல், being baked too much by fire.

காந்த வயசு, (காந்த+அயசு) அய மண், iron ore; 2. (காந்தம்+வயசு) காந்த மருந்துகளைச் சாப்பிட்டு அதனால் அடைந்த வயது, life prolonged by the use of the calcined preparations of magnet.

காந்த வலி, காந்தத்திற்குள்ள இழுக்கும் சக்தி, the attractive power of magnet.

காந்த விஷா, சிறு வழுதலை, prickly night-shade–Solanum indicum.

காந்த வியம், புணர்ச்சிக்காகப் பிறராற் சேரப்படல், being approached for sexual intercourse.

காந்த விருசு, காந்தத்தினாற் செய்த இருசு, magnetic axis.

காந்த வூசி, காந்தத்தினாற் செய்த வூசி, magnetic needle; 2. வடக்கு திசையைக் காண்பிக்கு மோர் காந்த வூசி. கப்பலை ஓட்டுவதற்காக வுபயோகப் படும் திசையறி கருவி, mariner's compass always indicating the north. It is used for directing the course of ships.

காந்த வைத்தல், தீய வைத்தல், allowing to be scorched.

காந்தளம், கலப்பைக் கிழங்கு, plough root–Gloriosa superba.

காந்தளிகம், சின்னி மரம், brich-leaved acalypha–Acalypha fruiticosa.

காந்தள், சவர்க் காரம், fuller's or dhoby's earth; 2. வெண்காரம், borax; 3. கார்த்திகைப் பூ. இது அடியிற்கண்டபடி பல வகைப்படும், November flower–Gloriosa superba. It consists of different varieties as mentioned below;-

1. செங்காந்தள், red November flower.
2. வெண் காந்தள், white November flower.
3. சிறு காந்தள், small November flower.
4. சிகப்புக் காந்தள், red November flower.
5. கருங் காந்தள், black November flower.
6. நரிக் காந்தள், jungle November flower.
7. காய் காந்தள், another variety.

காந்தற் சோறு, தீய்ந்த சோறு, over-boiled and scorched rice.

காந்தாமற் கருகாம லெடுத்தல், பதனழியாத படிக்கும் தீயாமற் படிக்கும் பொங்கி எடுக்கும் பதம், a stage at which boiled substances are taken out without being over-boiled or scorched.

காந்தா யசம், அயக் காந்தம் iron mixed with magnet or the one containing magnetic power.

காந்தா ரகம், ஓர் வகைக் கரும்பு, a kind of sugar-cane.

காந்தாரப் பொருள், காந்தார தேசத்துக் காடுகளில் விளையும் பொருள்கள், the forest produce of Kandahar near Peshawar.

காந்தாரம், காடு, forest; jungle, 2. ஐம்பத்தாறு தேசத்துள் ளொன்று, one of the 56 ancient provinces of India i.e. Kandahar near Peshawar; 3, ஓர் கரும்பு, a kind of sugar - cane; 4, நோய்க்குறி அல்லது குறிகளுள்ள நோய், a symptom or symptomatic disease.

காந்தாரி, சிவனார் வேம்பு, Shiva's neem- Indigofera asphathoides; 2, சக்தி சாரம், a prepared salt of burning and acrid nature as opposed to சிவ சாரம் which see; 3. எரிச்சலை யுண்டாக்குந் தன்மை யது, that which is of a buning nature 4. ஓர் வகைக் கரும்பு, see காந்தாரகம்; 5, காந்தார தேசத்தில் விளையும் பொருள்கள் அவையாவன:- குங்குமப் பூ, பிஸ்தா பருப்பு. குமிழந் தேக்கு முதலியன, substances growing in Kandahar including Kashmir flower - European saffron, Kashmir nut- Mismish, Kashmir tree - Goomil teak etc.

காந்தாரி, தச நாடியி லொன்று, இது கண்டமதி லோடி அவ்விடத் திரா நின்ற உயிரைப் பற்றி, பெரு நரம்போடு சேர்ந்து நிற்கும் ஓர் வகை நரம்பு, இது ஏழு நாடியாய்ப் பிரிந்து உடம்பில் காது, குரல்வளை, நுரையீரல், ஈரல், வயிறு முதலிய பாகங்களுக் கோடி நிற்கும், இது இடகலை நாடிக்குப் பின் புறத்தில் சேர்ந்து இடது பக்கம் முள்ளந் தண்டு வரையிலும் வியாபித் திருக்கும், one of the ten nerves extending to the throat absorbing or taking with it, the vital air present. It branches out into seven small nerves which are distributed to the various regions of the body viz. the ear, the larynx, the lungs, the liver, the stomach, the alimentary canal and the heart - Pneumogastric nerves. It is a nerve joining in its posterior course with the Idakala (nerve - Current of Prana) working in the left half of the body and the left sympathetic, perhaps the spinal accessory arising from the sides of the spinal marrow.

காந்தாரிக் களிம்பு, சீனக்களிம்பு, an ointment prepared by the chinese.

காந்தாரி மிளகாய், சீனத்து மிளகாய், China pepper.

காந்தாளி, see காந்தாளிகம்.

காந்தாளிகம், சின்னி மரம், see காந்தளகம்.

காந்தாள், கார்த்திகைப் பூ, see காந்தள்.

காந்தானம், நாய் வேளை, dog mustard - cleome viscosa.

காந்தி, சூரிய காந்தி. இது சூரியனைக் கண்டவுடன் பூக்கும், Sun flower - Hibiscus mustabilis. Lover of the sun. It opens when the Sun is up; 2, சந்திர காந்தி, இது சந்திரன் புறப்படப் பூக்கும், ஆகவே இப் பெயர். lover of the moon- Ipomaea bonanox. It is so called from its flower opening when the moon is up; 3, ஒளி, brightness, brilliance; 4, உஷ்ணம், heat. 5, கற்பூர சிலா சத்து, a fossil or mineral drug known as crystalised foliated gygsum; 6, கிரணம், ray; 7. இரசித பாஷாணம், a kind of arsenic; 8, விஷ்ணு கரந்தை, Vishnu's basil- Evolvulus alisinoides; 9, காவிக் கல், red ochre; 10, பசு மஞ்சள், turmeric; 11, வைடூரியம், a gem called cat's eye; 12, சிற்றிலைப் பூடு, iron veed- Serratula anthelmintica alias Vernonia anthel - mintica; 13, பித்தம், bile; bilious humour.

காந்திகம், காந்த சக்தி, இச் சக்தியால் நோய்களை குணப் படுத்தலாம், இது ஆங்கிலேயருக்கும் ஜெர்மா னியருக்கும் தெரியு முன்னமே வெகு காலமாய் நமது நாட்டில் தெரிந்து அனுசரிக்கப்பட்டு வந்தது, Magnetism. Diseases are cured by this method. It found its way into the Therapeutics of the ancient Hindus; and Animal Magnetism was very extensively practised in India long before they were recognised by Mesmer in Germany and John Eilliotson in England.

காந்தி காட்டல், சூடு தாக்கல், imparting heat.

காந்தி கொள்ளல், உடம்பு சூடு கொள்ளுதல், system getting heated; 2, உடம்பு மேனியடைதல், body becoming glossy.

காந்திதம், பித்தம், bile.

காந்தி தாயகம், ஓர் மரம், an unknown tree.

காந்திப் போதல், அதிகத் தீயினால் தீய்ந்து போதல், becoming scorched by over- heat.

காந்தி யதிக மேனி, காவிக் கல், red ochire.

காந்தியானமருந்து, சூட்டை யுண்டாக்கு மருந்து, warmth producing medicine.

காந்தி யிருத்தல், அதிக சூட்டினால் கருத்தல், blackened by being over - burnt or scorched.

காந்தியுட் மூலி, சோதி விருட்சம், a plant luminous in the dark; 2, நீலஞ் சோதி, bright blue leaved plant.

காந்தி யோனி, சிலா மதம், bitumen, a fossil exudation; 2, உதிர பாஷாணம், a mineral poison. see இரத்த பாஷாணம்,

காந்தி யோன், கற்பூரச் சிலை,see கற்பூர சிலாசத்து.

காந்தி ரசம், குங்குமம்,red powder or red paint used on the forehead by Hindus.

காந்திரி, புணருவதற்காக ஒரு பெண்ணிடம் போதல், going to or approaching a woman for sexual intercourse.

காந்த் கரித்தல், காந்த மேற்றல்,rendering magnetic - imparting magnetic Properties, inducing magnetism.

காந்துகம், வெண் காந்தள், papery-barked obtused -leaved mangrove -Avicennia officinalis (alba); 2, வெள்ளை காந்தற் பூ, a white variety of gloricsa.

காந்துதல், எரிச்ச லுண்டாதல், burning as a sore; 2, தீய்ந்து போதல், becoming scorched; 3, பல்லினால் காண்டுதல்,scraping with the teeth; 4, வெப்பங் கொள்ளல், feeling a glowing sensation in the body; 5, கருகுதல், becoming charred; 6, வெப்பத்தினால் உறிஞ்சுதல் ab sorbing through heat.

காந்துலி, மண்ணீரல்,splean.

காந்தை, அழகு வாய்ந்த பெண்,a lovely woman.

காந்தோ ரகம், செங் கரும்பு,red - coloured sugar- cane.

காபச்சார், see ஆதொண்டை,

காபடிகன், இந்திர சாலம் செய்வோன், a magician; one creating an illusion.

காபணம், ஒத்தடம், fomentation.

காபதம், see இலாமிச்சை வேர்.

காபாலம், குட்டம், leprosy

காபாலன், சீரபந்த பாஷாணம், a kind of aresenic.

காபாலி, திருகு தாளி, twisted tali as in the proverb, தில்லை முள்ளும் திருகு தாளியும்.

காபி ,see காப்பிசாயனம்.

காபிசம், see காப்சாயனம்

காபி சாயனம், கள், toddy.

காபித்தம், விளா, wood -apple - Feronia elephantum.

காபிரம், சாம்பிராணி, Frankincense benzion.

காபிலம், உச்சி முதல் உள்ளங் கால் வரை ஈரத்துணியால் உடம்பைத் தேய்த்து சுத்தி செய்தலான ஓர் வகைக் குளியல். இது சாதாரணமாய் நோயாளிகளுக்காக வமைந்தது, a kind of bath generally prescribed for a class of bed- ridden patients; and it consists of rubbing them from head to foot with a cloth soaked in cold water and sponged- Sponge bath; 2, கபிலப் பசுவின் நெய், ghee of a dark brown cow esteerued in diet.

காபினி, நவச் சாரம், sal - ammoniac -Ammonium chloride.

காபுரம், வயிற் றுப்பிசம், tympany; wind dropsy; 2, பாக்கு மரம், arca-nut tree;3. ஓர்வகைக் கோரைப்புல், a kind of sedge grass- Cyperus pertinuis; 4, ஓர் வாசனை, a perfume.

காபுலிக் கடுக்காய், முழுவதும், நன்றாய்ப் பழுத்து சிவந்த நிறமடைந்த காபூல் தேசத்துக் கடுக்காய், a well - matured, red galnut of Kabul; 2, சிவந்த சீனக் கடுக்காய்,red China galnut; 3, சீமைக் கடுக்காய், galnut imported from foreign countries.

காபுலிக் காவி, கற் காவி, Kabul earth – Armenian bole.

காபுலிப் பெருங் காயம், காபூலி லிருந்து வரும் பெருங்காயம், asafo etida obtained from Kabul in Afghanistan.

காபுலி மட்டி, see காபுலிக் காவி,

காபுலி யரிசி, வாயு விளங்கம், Kabul rice-Embelia ribes.

காபுலி யவரை, பெரிய அவரை. இது பெங்களூரில் பயிராகும்.Kabul country bean; broad bean - Vicia faba alias Fubavulgaris. It is a plant with edible seeds grown in Bangalore.

காபேட்சு, நாணல்,reed.

காப்பி, கோப்பிச் செடி, இது நமது தேசத்துச் செடி யல்ல, ஆனால் இத்தேசத்திற்குக் கொண்டு வந்து பயிராக்கப் பட்டது. பூர்வத்தில் அராபியர்கள் மாத்திரம் இதை வழங்கி வந்ததாய்த் தெரிகிறது. இப்பொழுது தென்னிந்தியாவில் மேற்கு மாகாணங்களின் காடுகளில் பயிராகும், குளிர்ந்த தேசமாகிய மைசூர்,குடகு, பைங்கா நாடு, நீலகிரி, திருவனந்தபுரம், மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலாகிய மலையாளம் இவ்விடங்களில் விசேஷமாய்க் கிடைக்கும், மேலும், சேர்வராய மலை, ஆனைமலை, ஜாவா, இலங்கை

முதலிய தீவுகளிலும் விளையும், இச்செடி 15-16 அடி உயரம் வளரும். ஆனால் 2-3 அடி வளர்ந்த புல்லின் மேற் பாகத்தைக் கழித்துப் பக்கங்களில் தூரு விடும்படி செய்வார்கள். மூன்றாவது வருஷத்தில் காய்கள் விடும், காய்கள் கொத்துக் கொத்தாய் இருக்கும், ஒவ்வொரு காய்களிலும் இரண்டு விதைகள் ஒட்டினாற் போலிருக்கும், பழுத்தக் காய்களை நசுக்கி, அதினின்று வரும் விதையைப் பொறுக்கிக் காய வைத்து பதப் படுத்துவது தான் காப்பிக் கொட்டை, Arabian coffee- Coffea arabica alias C. Vulgaris. This plant is not a native of this soil; but it was introduced here by the Arabs who were formerly using it. It is now very common and is cultivated in the Western side of the presidency and runs wild in some forests. The chief coffee districts in S.India are Mysore, Coorg, Wynad, Nilgiris, Travancore, and all sections of the Western ghauts. There are also numerous estates in other isolated hill- ranges such as Shervaroys, Anamalais and in the islands of Ceylon, Java, etc. The plants grow to a height of 15-16 ft. and when they have grown 2-3 ft; high, they are topped to promote lateral growth. The trees begin to bear fruit during the third year. The berries are two - seeded and closely united; they are found in clusters. When the tree bears fruit, the riped berries are picked up by hand and the pulp is removed; and the seeds therein are washed and dried. These are known as coffee- seeds.

NOTE- The plant was first brought across the Red sea from Abyasinia and cultivated in the mountains of Arabia; and this product was introduced in Europe at Venice in 1615 A.I). The plant was introduced into Southern India more than two countries ago by a Muhamadan pilgrim, Bababuden, a fakir who took up his Samadhi and got buried on a hill in Western Mysore; that hill is even now known as Bababuden Giri.

காப்பிக் கஷாயம், காப்பித் தூளைத் தண்ணீரில் ஊறப் போட்டு இறக்கிய கஷாயம், coffeedecoction. See காப்பித் தண்ணீர்.

காப்பிக் கொட்டை, காப்பிச் செடியின் பழத்தினின்று எடுத்துக் காயவைத்து பதப் படுத்திய விதை, இதற்குக் கோப்பிக் கொட்டை என்றும் பெயர், இக் கொட்டையின் தரம், காயின் வடிவு, நிறம், வாசனை, செழிப்பு முதலியவைகளைக் கருதி, பலவிதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது, இதை வறுத்துத் தூள் செய்து கஷாய ரூபமாக வழங்குவார்கள், இதுதான் காப்பித் தண்ணீர், coffee seeds -Coffea beans. It is from the ripe red berries that this seed is taken, washed and then dried. The valu of commercial coffee depends upon the texture, form and size of the berry and its colour and flavour. Various are the species of the genus Coffee viz. alpestris grumelioides, wightiana, liberica (Liberian caffee etc. The seeds when ground and roasted are known as coffee- powder which is used for making decoction.

காப்பிச் சூரை, காப்பிச் செடியில் பூச்சிகளினாலேற்படும் நோய், a disease common to coffee crops caused by a fungus - Coffee Blight.

காப்பிச் செடி நோய், காப்பிச் செடியில் பூச்சி விழுந்து, அதன் காய்ப்பைக் கெடுக்கும் ஓர் நோய், a disease of the coffee plant caused by lungus (Hemibia vastatrix) which destroys the wholecrops.

காப்பிடம், ஒற்றிடம், fomentation.

காப்பித் தண்ணீர், காப்பித் தூளை வெந்நீரில் கொதிக்க விட்டு, கஷாயமாக வடித்து, அதில் பாலும் சர்க்கரையும் பலவாறாகக் கலந்துள்ள ஓர் வகைப் பானம், இது உஷ்ணத்தைத் தரக்கூடிய தாகையால், இதைத் சாதாரணமாய் நரம்பு மண்டலங்களுக்குச் சுருசுருப்பை யுண்டாக்க உபயோகிப்பதுண்டு. இது உழைப்பாளிகளின் சிரமத்தை நீக்கி, ஆயாசம், களைப்பு இவைகளை மாற்றி கிளர்ச்சியைத் தரும். இதைக் குடற் கோளாறு வாதத் தலைவலி, சோம்பல், ஆரம்ப அசீரண பேதி, விஷம் அல்லது முறை சுரம் முதலிய நோய் களுக்குக் கொடுப்பதுண்டு. இது இருதயம், குண்டிக்காய், மேற் சருமம் இவைகளின் தொழில் களை விருத்தி செய்யும். இதற்கு வியர்வையை யுண்டாக்குங் குணமுண்டு, ஆகவே, இதை குளிர் காலத்தில் பிரயோகிப்பதனால் சுருசுருப்பை யுண்டாக்கும், அருவருப்பைத் தரத்தக்க மருந்துகளான கொள்ளு, நிலா விரை, பேதியுப்பு முதலியவைகளின் ருசியை மாற்றுவதற்காக இதைக் கொடுக்கலாம், பால், சர்க்கரை கலக்காமல், மிகுதியாகத் தூளிட்ட கஷாயத்தினால் காசத்தின் கொடுமை, கக்குவான் இவைகள் சிறிது தணியும், மயக்கத்தைத் தரும் அபினி, ஊமத்தை முதலியவைகளால் ஏற்பட்ட விஷங்களில் தெளிவை யுண்டாக்கி, போதையா லேற்பட்ட தளர்ச்சியை போக்கும். நரம்பு நோயாலேற்பட்ட மூளையின் வலியை மிதப்படுத்தும், வாந்தி பேதி சன்னிபாத சுரம் இவைகளின் ஆரம்பத்திலும் இதைக் கொடுக்கலாம். இக்காப்பித் தண்ணீரைத் தேயிலைத் தண்ணீரைப் போலவே சாதாரண பானமாக உலக முழுவதும் உபயோகித்து வந்தாலும், இதனால் ஏற்படும் நன்மைகளைவிட கெடுதிகள் பலவுண்டு, குளிர் தேசத்தில் உபயோகப் படுத்தக்கூடிய இதை, உஷ்ண தேசத்தில் உபயோகிப்பதால் நேரும் நோய்களுக்கு கணக்கே கிடையாது அசீரண ரோகிகளுக்கு இது உதவாது, தூக்கத்தை கெடுக்கும், இதனால் பாரிசவாயு, சந்துப் பிடிப்பு,

நீர் வியாதி முதலிய நோய்கள் உண்டாகும், coffee drink. It is a decoction of coffee powder to which are added milk and sugar in desired proportions. It affords heat to the system; and the effect of the coffee alkaloid is there fore to stimulate the vascular system, It serves as a very useful drink for the labouring classes in fatigue as it produces a feeling of buoyancy and exbilaration, increases the hearts action and stimulates the system so as to sustain prolonged and severe muscular exertion. It is prescribed medicinally for hemicrania, derangements of the nerves and viscera, drowsiness, diarrhoea at the infant stage malarial and intermittent fever etc. It accelerates the action of the heart, the kidney and the skin, its diophoretic property aids generally its stimulating effect rendering its use desirable in cold climates and in the cold weather. It is given to disguise the taste of nauseous medicines, particulary quinine, senna and epsom salts. A strong decoction without milk or sugar is an effectual stimulent in opium poisoning and other narcotic poisons; it allays the severity of the paroxyam in spasmodic asthma or whooping cough. It is advantageoualy given in the depression after drunkenness; and it is very useful in all nervous affections mani festing depleted energy of the brain. It is recommended also in cholera infantum and in the early stages of typhoid fever.

Although the decoction of the coffee seeds is used as an ordinary drink like tea all over the world, the re-actions injurious to the system ,arising from the use of this,are innumerable; and consequently the disadvantages are apparently more than the advantages derived thereof. By its being used in hot instead of in cold climates, countless diseases are said to arise. Its use by dyspeptic Patients is highly objectionable. It has the power like tea of retarding the advent to sleep for some hours. It is said to cause paralysis, rheumatism, diabetes etc.

NOTE:- The crystalline principle - Caffeiue is identical with the Theine contained in tea. It is said to have the power of checking the waste of tissues. Coffee contains also nitrogenous subs tan ces,salts of potassium, mag nesium and calcium in combination with phosphoric acid and chlorine.

காப்பித் தூள், காப்பிக் கொட்டையை வெண்ணெய் அல்லது நெய்யிட்டு வறுத்து இடித்து எடுத்த பொடி, இது வெகு மணமாகயிருக்கும், இதைத் தான் காப்பித் தண்ணீருக்கு உபயோகிப்பது, powder of coffee seeds prepared by adding some butter or ghee to the seeds and then roasted. It is afterwards powdered and used in decoction. This powder bears a fragrant smell.

காப்பிப் பூச்சி, see, காப்பிச் செடிப் பூச்சி.

காப்பியம், தேரையர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a treatise on medicine by Terayar, an ancient Tamil physician;2, தாமரை மணி, pericarp of the lotus.

காப்பிரி, செந் நெரிஞ்சி, a red variety of caltrops -Tribulus terrestris; 2, ஓர் சாதி, Kaffir or negro of Africa; 3, பூண்டின் முதல் மொழி, plant first term as in காப்பிரி மிளகாய், Kaffre chilly (large chilly).

காப்பிரிக் கோழி, சிறகில் சுருட்டை மயிர்கள் வாய்ந்த ஆப்பிரிக்கா தேசத்துக் கோழி, a species of African fowl with a peculiar feather having a tendency to curl up; frizzled fowl.

காப்பிரி சல்லாத்து, காட்டு சல்லாத்து. இது சுருட்டையுள்ள சல்லாத்துக் கீரைச் செடி, இது உடம்பின் சூட்டை யறுத்துக் குளிர்ச்சியைத் தரும்,curled endive - Chichorium endiva. It eliminates the heat and cools the system.

காப்பிரி மிளகாய், பெரிய குட மிளகாய் இது பெரியது, குடத்தைப் போன்ற வடிவமுள்ளது, கார மிராது, சிறிய எலுமிச்சையள விருக்கும், தோல் கனதி, மெதுவு, தோட்டத்தில் பயிராகும். இதை இந்தியர்கள் தயிரி லிட்டு ஊறு காயாகவும் அல்லது காய வைத்து வற்றலாகவும் உபயோகிப்பார்கள். ஐரோப் பியாகளோ, கறிக் குழம்பி லிட்டும், அல்லது இதைப் பிளந்து மசாலையிட்டும், காடியுடன் சேர்த்து ஊ று கா யா க வு ம் உபயோகிப்பார்கள். இதில் சிறிய குட மிளகாய் என்பது மற்றோர் இனம், Kaffree chilly; pot - chilly; bell -pepper- Capsicum grossum. The title is from its shaps of a water- vessel. It is a very large species of mild chilly, about the size of a lime; skin fleshy and tender; cultivated in gardens.Indians soak it in curd and use it as Pickle or dry it in the sun and used it as a fried curry. Europeans use them either in stews or have them opened, stuffed with certain spices and pickled in vinegar. There is another variety a smaller one known as Cherry - pepper Capsicum cerasiformis. 2, ஓர் கொடிய காரமுள்ள காப்பிரி மிளகாய், an intensely biting fruit known as African pepper- Capsicum fastgiatum.

காப்பிரி வெலுமிச்சை, காட் டெலுமிச்சை Indian wild lime - Atlantia momophylla.

காப்பு, மூங்கில், bamboo- Bambusa arundinacea; 2, திரு நீறு, sacred ashes worn for protection; 3, காவல் ,protection, 4. மாந்திரித்தக் கயறு,a magic string used as a protective;5, மாந்திரீகன் பாதுகாப்புகாக தோளில் அணியும் ஓர் தடயம். a magic ring or

bracelet made of copper or silver worn by magicians on their upper arms as a preservative from any injury by their adversaries; 5. see காப்புறை.

காப்பு கட்டல், பேய் பூதம், அல்லது பில்லி, சூனியத் தொழில் இவைகள் அணுகாதபடி, பாது காப்புக்காகக் கடவுளைத் தியானித்து குளிசம். அல்லது மஞ்சள் கயிற்றை பிணியாளிகளின் கையில்கட்டுதல், tying amulet or a yellow string after preaying to God, as a protective against the influence of evil spirits and other acts of malevolence; 2, மூலிகை சாபம் நிவர்த்தியாகும் பொருட்டு ஏற்பட்ட மந்திரத்தைச் செபித்து குறித்த மூலிகைக்கு மஞ்சள் நூல் கட்டுதல், trying a yellow string to a particular plant after chanting the appropriate mantrams for dispelling evil curses. so as to derive the full benefit of that drug towards diseases.

காப்புகா வரிசி, see கார்போக வரிசி.

காப்புறை, நோய்கள் அணுகாமற் `படிக்குக் காக்கு மருந்துகள். இது தமிழ் வைத்தியப்படி காப்பு,நீக்கம், நிறைப்பு ஆகிய மூவகை மருந்து களுள் ஒன்று, medicines which act as preventives in diseases. It is one of the three classes of medicines viz. preventive, curative, and suffusive as contemplated in Tamil medicine.

காமகக் கோபி, see ,இருவாட்சி.

காமகட்க தலம், தாழை common screw- pine of India -Pandanus odoratissimus.

காம கஸ்தூரி, திரு நீற்றுப் பச்சை, love- musk - Ocimum basilicum.

காம கமனம், காமத்தின் நடவடிக்கை, lascivious life; immoral habits.

காமகம், காமுறல், indulging one's passions by running after men or women.

காம கரம், காமுகம் அதாவது காமத்தை மூட்டு மருந்து, any medicine that promotes sexual desire- Aphrodisiac.

காம கருக்கல், மூன்று மாதத்தியப் பிண்டம், *foetus three month's old.*

காம கலிதல், விந்து வெளிப் படல், discharge of semen, 2, வீரியம் பாய்தல், emission of semen.

காம காந்தம், குறிஞ்சா, see காமுகம்.

காம காமின், காம விகாரத்தினா லேற்படும் பலவித இச்சைகள், various desires or wishes following lust; the dictatcs of sexual passion.

காம கிருமி, பெண்களின் யோனியிலிருந்து கொண்டு தினவை புண்டாக்கிக் காம விச்சையை யுண்டு பண்ணும் ஒர்விதப் பூச்சி அல்லது புழு, a germ in the vagina of the females causing itching sensation and exciting them to sexual acts.

காம குணம், மோகம், passion.

காம கேசரி, அதிக மோகம், excess of sexual desire.

கா கேசரிக் குளிகை, புருஷருக்குத் தாதுவிருத்தியை புண்டாக்கி அதிக மோகத்தை மூட்டு மோர் மாத்திரை, pills promoting excesive secreation of semen thereby exciting sexual desire in men- Aphrodisiac pills.

காம கேளி, காம விளை யாட்டு, sexual perversion; love play, 2, புணர்ச்சி ,coition; copulation.

காமக் கடப்பு, காம விச்சையின் மிகுதி, excess of sexual passion; 2, அடங்காக் காமவிச்சை, un controllable lust.

காமக் கண்ணி, காமப் பார்வையுடையவள், a woman of lustful eyes.

காமக் கலகம், காமப் புணர்ச்சி, sexual congress; 2 காமச் சேஷ்டை, sexual perversion; disordered state of sexual inpulse.

காமக் கவலை, காம விகாரம், anxiety or disquietude of mind caused through *lustful thoughts*; 2. காம நோய், lasciviousness.

காமக் களை, பெண்ணின் காமத்தினளவாக கலவியில் யோனி வழியாய் வெளிவரும் காம நீர், a fluid discharge in a woman from orgasm in sexual intercourse. This is unknown in Western science.

NOTE:-*The ancient doctrine of the* Siddhars is that each sex contributes a sexual fluid whose elements, mingling and getting *incorporated into one*, Constituted the gnesis of a new being; and this was long held to be an absurd theory by Westem scientists. We see that this theory is *not* very far from what modern rescarches have established, So this fluid is differednt from any discharge that might have escaped from the ovary on the part of the female.

காமக் காய்ச்சல், காம விரகம், feverishness experienced in lust through exitement - Veneral fever; 2, பெண்களுக் கேற்படும் காமக் காய்ச்சல், a feverish condition in a female through extreme sexual desire.

காமக்கிரியை, see காம கேளி,

காமக் கிரீடை, காம லீலை, amorous sport.

காமக் கிழத்தி, குலப் பரத்தை, a faithful concubine of a courtesan's Family; a concubine who is not legally married; 2, காமத்தைத் தணிப்பவள், a woman satisfying man's lust.

காமக் குழி, யோனித் துவாரம், the vagina of a female.

காமக் குறிப்பு, காமத்தினால் உடம்பிற் காணப்படும் குறிகள், the symptomatic changes found in men and women through the excitement of sexual passion; 2, காதலை வெளிப்படையாகக்

காட்டும் சைகைகள்,amorous gestures exhibited by a woman or man.

காமக் கூட்டம், இருவரும் தம்முன் மனமொத்து பிறர் அறியாமல் செய்யும் புணர்ச்சி, clandestine intercourse siter mutual consent.

காமக் கொடி, காமப் பெண், lascivious woman.

காமக் கொடியோன், சூத பாஷா ணம், a kind of arsenic.

காமக் கொடுமை, காம விகாரத்தால் கொடிய காரியத்தைச் செய்தல், cruelty with sexual perversion - Tyrannism.

காமசரம், மாமரம், mango tree - Mangifera Indica

காம சரீரம், சூக்கும தேகம். astral or subtle body.

காம சலம், see காமக் கனை,2. விந்து, semen - semen virorunet mulierum.

காம சனனி, வெற்றிலை, betel - pepper–Piper betle,

காம சன்னி, காம விகாரத்தினால் ஏற்படும் சன்னியைப் போன்ற குறிகள், symptoms akin to those of delirium exhibited by person intensely excited by sexual passion.

காம சாதி, கொக்கோக நூலின்படி வகுக்கப்பட்ட நான்கு வகை பெண் சாதிகள், அவையாவன- பதமினி, சங்கினி, சித்தினி, அத்தினி,the four classes of women as stated above divide according to their lust, and enumerated in the Tamil erotic science of Kokkaga Muni.

காம சாஸ்திரம், மதன நூல், இதுவே கொக்கோக நூல், erotic science or the scinece of love and love- play. It is classed as medical science for, it treats physically; and so it is termed as Sexual Physiology.

காம சாரம், see அபினி,2.மா மரம்,,mango tree.

காம சாரி, அடைக்கலங் குருவி demestie sparrow. It is so called from its excessive desire for sexual intercourse.

காம சாலனம், காமத்தா லுண்டானது, caused by passion; arising from lust.

காம சீத்தங்கம், காமக் கவலையும், காம பாதையும் உள்ளவன்,one whose mind and body is overcome with sexual passion.

காம சுந்தரம், பசு, cow.

காமச் சுரம், சையோக விஷயமாய் அதிக விருப்பத்தினால் ஏற்படும் காய்ச்சல், இதனால் மனோ வியாகூலம், மயக்கம், உணவு வெறுப்பு, நெஞ்சு வலி, இளைப்பு முதலிய குணங்களுண்டாம். மேலும், ஆண் குறி, பெண்குறி, தொப்புள், முலை, முதலிய விடங்களில் ஓர் உணர்ச்சியையும் சில சமயங்களில் உடம்பின் எரிச்சலையும் உண்டாக்கும், amative fever or fever- lust. It is a fever incidental to an ungratified amorous longing of the heart or crowing due to any such ardent

passion. It is characterised by aberration of mind, drowsiness, aversion to food, pain in the cordiac region and fast emaciation. It is also marked by a peculiar sensation in the male or female genital region , navel, nipple etc. and sometimes even by a burning sensation in the body.

காம ஞாலத்தி, see. இலந்தை.

காமஞ் சுருக்கி, காம விச்சையைத் தணிக்கு மருந்து, an agent that lessens the sexual impulse - Anti aphrodisiac.

காமணம், சிறுமூலம், (lit) Small root, 2. திப்பிலி, long - Pepper.

கா மணி, நவச் சாரம், ammonium chloride; 2, கையாந் தகரை, eclipse plant -Eclypta prostrata.

கா மதம், பசுவின் சாணம், cow - dung.

காம தரிசனம், காமப் பார்வை, lustful look; the look of a charming person; looking lovely; 2, காமக் காட்சி,illusion from lust.

காம தனம்,ஊமத்தை, datura plant.

காமதாலம், குயில் Indian cuckoo

காமதுரம், arrack, liquor ; 2, கள்ளு, toddy; 3, ஓர் மதுர பானம், a sweet drink.

காம தூதி, பெண்குயில், the female of an Indian cuckoo; 2, பாதிரி மரம், trumpet flower tree- Bignonia suaveolens.

காம தூதிகம், ஓர் பூடு, a plant– Tiaridium indicum.

காம தேவர், பதினொரு தரம் சாரணைத் தீர்ந்த ஓர் இரசக் குளிகை. இதை சித்தர்கள் கவுனம் பாய்வதற்காக உபயோகிப்பார்கள், a consolidated mercurial pill animated eleven times. Siddhars use this pill for flying in the serial regions.

காம தேனு, see காம தேவர்; 2. தாளிப் பனை, talipot tree–Coripha umbraculifera; 3. வெற்றிலை, betel-pepper–Peper-betle.

காமத் தானம், கொக்கோக நூலிற் கண்டபடி பெண்களுடம்பில் காமந் தங்கி நிற்பதாகக் கருதப் படும் சில பாகங்கள். இவை நகக் குறி முதலியவைகளினால் கூச்சமேற் படுத்தி காமப் பெருக்கை புண் டாக்கக் கூடிய இடங்கள், certain parts of the female body, the excitation of which caused by a male through impress of nails etc. said to bring about erotic fancies and increase of sexual passion, as contemplated in the Science of Love compiled by Kokkoga Muni–Erotogeic zone.

காமத் திராச மூலம், see கருந் தக்காளி.

காமத் தீ, காமாக்கினி, இது உடம்பிற் தங்கியுள்ள மூன்றுவித அக்கினியுள் ளொன்று, fire of lust, said of the venereal principle operative in the human body. It is one of the three fires in the human system.

காமத்துப் பாலோர், தூர்த்தர், lascivious people.

காமத்துப் பால், திருக்குறளில் காமத்தைப் பற்றிக் கூறும் பகுதி, a portion in the sacred 'Kural' treating of Love and Love affair; 2. விந்து, semen; 3. நாதம், semen muliebre.

காமத் துரோகி, காமத்தை நீத்தவன் அதாவது சன்னியாசி, one who hates lasciviousness; celebate; 2. ஆசையை விட்டோன், one who got rid of all desires. 3. பெண்ணாசையைத் துறந்தோன், one who is free from sexual desire.

காமத்துவசபங்கம், ஆண் தன்மையில்லாமை, want of the power of procreation; impotency.

காமத் தேகம், காம விச்சையை அதிகமாகக் கொண்ட தேகம், the body of a amorous person; the body of a person easily susceptitible to sexual passion.

காமத் தேகி, காம விகாரி, a passionate person.

காமத்தைக் களையப் பண்ணி, பூனைக் காலி, cowhage–Mucana pruriens.

காமநாயகம், காமத்தை விளைவிக்கும் ஓர் வகைப் பிசின். இது பெர்ஷியா தேசத்திலிருந்து வரும் ஓர் யுனானிச் சரக்கு, a resin supposed to promote sexual desire. It is an aphrodisiac drug obtained from Persia and used by Unani doctors in medicine; 2. ஓர் வகைப் பூண்டு, ammoniacum plant.

காம நீர், பெண் காமக் களை, see காமக் களை; 2. சுக்கிலம், விந்து semen, virile; 3. தலைப் பிண்ட செய நீர், a pungent liquid prepared from the first-born child or foetus; 4. வெடி யுப்பைக் கட்டி காரமேற்றிய செயநீர், a consolidated nitre exposed to night's dew to make it a pungent liquid.

காம நூல், மதன நூல், இது 64 கலைக்கியானங்களிலொன்று, The Science of Love which is one of the 64 arts and sciences of the Hindus–Sexual physiology; 2. கொக்கோக நூல். இதில் 64 லீலைகளைப் பற்றி விவரித் துள்ளதால், இதை ஒரு ஆபாச நூலெனக் கருதி,தற்கால நூல் ஆராய்ச்சியாளர் அபிப் பிராயத் தின்படி இராசாங்கத்தாரால் விலக்கி வைக்கப்பட்டுள்ளது. The science treating exhaustively not only of Love and Love affair but also about the 64 postures in sexual intercourse–Erotics. It is brushed aside by the modern scientists as obscene considering it as vulgar and too intricate and mysterious to be comprehended by modern science. It was written in verses in Tamil by Kokoga Muni and is now prescribed by Government as an obscene publication.

காம நோய், காமத்தா லுண்டாகும் பலவித நோய்கள், diseases in common arising from sexual desire; 2. காம விகாரம், morbid sexual instinct or desire–

Eroticism; 3. காமத்தா லுண்டாகும் வேதனை அல்லது துன்பம், love-sickness.

காம பரணி, கழுதைத் தும்பை, donkey toombay–Trichodesma zeylanicum.

காம பலம், காமவிச்சை, sexual desire; 2. காமத்தை விளைவிக்கும் ஓர் வகை மாம்பழம், a species of mango-fruit promoting sexual passion; 3. காமத்தை யுண்டாக்கும் பழம், any fruit tending to increase sexual passion.

காம பலை, மாம் பழம், mango known as love-fruit–Mangifera indica.

காம பீடிதம், காம வேதனை, torment of lust.

காம பூதம், மனிதர்களுக்கு கனவில் அதிகமாகக் காம இச்சையை மூட்டும் மோகினி யென்னும் ஓர் பெண் பூதம், a female demon known as Mohini exciting excessive sexual desire in dreams of men or women; 2. தான் கருத்து வைத்த தலைவன் அல்லது தலைவியை நினைவிற் காணல், the appearance of her lover in a woman's dream or of his love in a man's dream; the vision of a lover in dream; 3. காமத்தால் ஏற்படும் ஓர் நோய், love-sickness.

காம போகம், காம நுகர்ச்சி, gratification of lust or sexual desire.

காம போகி, குன்றி மணி, crab's eye.

காம போசம், கமேலா மாவு மரம், Kamela tree–Rottleria tinctoria; 2. ஓரூர், Cambodia.

காமப் பயித்தியம், காமக் கவலை, see காம வெறி.

காமப் பற்று, காம விச்சை, sexual desire; 2. மனதின் தீக் குணங்களுள் ஒன்று, libidinous propensities; 3. உலகப் பற்று, (in Moral Philosephy) wordly desire.

காமப் பாலுடம்பிற் கலத்தல், பெண்களின் நாதத்தை சித்தர்கள் தங்கள் உடம்பிற் கலக்கும்படிச் செய்தல், secretions of women absorbed by Siddhars' into their system through sexual contact or other means of sexual congress which are too delicate to be mentioned here; 2. சித்தர்கள் தங்கள் விந்தைக் கட்டி இரத்தோட்டத்திற் கலக்கும்படிச் செய்தல், conservation of the sex-energy and the subsequent transmutation of this to physical strength and vitality by process of absorption through Yoga practice; 3. காயசித்தி யடைதல், getting rejuvenated.

NOTE– the sex energy whch is imported into the blood circulation invigorates the system thus paving the way for Rejuvenation. This is a secret process known only to Siddhars and Yogis.

காமப் பால், முலைப் பால், mother's milk; breast milk; 2. விந்து, semen; 3. பெண்ணின் நாதம், a

காம ரசம், அகஸ்தியர் வைத்திய காவியத்தில் சொல்லியுள்ள வேர் மருந்து, anaphrodisiac preparation described in Agastiyar's Treatise on Medicine; 2. மா மரம், mango tree; 3. காம வின்பம், sexual enjoyment.

காம ரசாகிகம், பேரீந்து, wild date fruit–Phoenix dactylifera.

காமரசி, நெருஞ்சில், caltrops–Tribulus terrestris.

காம ரசேபிகம், நத்தைச் சூரி, button-weed–Spermacoci hispida.

காம ரதி வினோதம், சித்தினி சாதிப் பெண், one of the 4 classes of women divided according to last–Furor uterimus; 2. லீலாவதி, a female affected with an insane sexual desire–Nymphomaniac; 3. மகளிர் கலவி விளையாட்டு, wanton sport of women.

காமரம், see அகில்; 2. ஆல மரம், banyan tree; 3. வண்டு, beetle; 4. அடுப்பு, oven.

காமரி, புளி நறளை, hairy wild vine–Vitis setosa alias Cissus acida.

காமரிசி, see காமரசி.

காம ரீகம், see காமரீசம்.

காம ரீசம், புல்லுருவி, Indian mistletoe–Loranthus elasticus alias L. pentandrus.

காமரூபம், தான் இச்சித்த வண்ணம் மேற்கொள்ளும் வடிவம், physical form assumed or changed at one's will; 2. மோகத்தால் முகத்திற் காணப்படும் சாயல் அல்லது வடிவம், appearance or features manifested by persons of extravagant sexual passion.

காம ரூபி, பச்சோந்தி, இது மஞ்சளும் பச்சையும் கலந்த வர்ணம். கால், தலை சுத்த வெள்ளை; ஒட்டம் வெகு துரிதம். இது நினைத்தபடி நிறத்தை மாற்றக் கூடியதாலிதற்கிப் பெயர், chameleon–Lacerta chamaeleon. It is yellowish green except its head and legs which are white. It runs very fast. It is so called because of its power to chage its colour at will; 2. சித்தினி சாதிப் பெண், the last of the 4 classes of women extremely addicted to sensual delights and pleasures; 3. காமாதிக்கத்தினால் உருவமாறிக் காணப்படும் ஆண் அல்லது பெண், one who exhibits a different feature due to excess of sexual passion.

காம ரூபி லேகியம், தாது புஷ்டிக்காக பச்சை ஓணானை ஆதியாகக் கொண்டு மற்ற கடைச் சரக்குகளையும் சேர்த்துத் தயாரிக்கும் ஓர் லேகியம், a sweet confection or electuary prepared with chameleon as the chief ingredient mixed with other bazaar drugs and prescribed by Vaidyans as an aphrodisiac.

காமர், பேரழகு, excessive beauty said of women; 2. காமுகர்; lascivious or lewd persons; 3. ஆசை, desire.

காமர்த்தகா விரணம் போக்கி, புல்லூரி, see காம ரீசம்.

கா மலதை, ஆண் குறி, penis; 2. காம வல்லி, love-creeper–Ipomaea quamoclit.

காமலம், கழுதை லத்தி, ass's dung; 2. கண்ணில் பீளை தள்ளும் ஓர் நோய், an eye disease attended with purulent discharge; 3. பாலை வனம், desert; 4. வசந்த காலம், spring season; 5. மோகம், lust.

காமலன், காமுகன், lustful man.

காமலின், காமாலையினால் பீடிக்கப் பட்டவன், one suffe ring from jaundice.

காம லீலை, கொக் கோகத்திற் கூறியுள்ள 64 லீலைகள், the 64 postures intended for embracing a woman in sexual intercourse; wanton sport with a woman. See இலீலை.

NOTE–As a complete list of the 64 postures mentioned in the Tamil Erotic Science is not yet available, it will be published under மதன லீலை.

காமலை, see காமாலை.

காம வதி, மரமஞ்சள், tree turmeric–Coscinium fenestratum.

காம வலை, மோகங் கொள்ளும் படிச் செய்யும் சூழ்ச்சி, a device by which one is entangled or ensnared in lust.

காம வலை வீசல், மோகத் திற்குட் படுத்தல் அதாவது காம விச்சையை புண்டாக்கல், inducing of sexual passion by a woman through cunning devices; ensnaring a man to sexual delights of women.

காம வல்லபம், மாமரம், mango tree. See காம ரசம்.

காம வல்லி, ஓர் படர் கொடி, a spreading creeper.

காம வளை, See காம வாயில்.

காம வாயில், பெண் குறி, orifice of the vagina.

காம விகாரம், காமத்தினாலேற்படும் மாறுபாடுகள், physical and mental changes brought about as by an extravagant passion in men or women; 2. மோகத்தினால் விளையும் கோளாறுகள், disorders of sexual impulse–Erotopathy; 3. காம விளையாட்டு, wanton sport through sexual perversion; love-play; 4. காமக் கவலை, sexual craving–Amativeness.

காம விகாரி, மோகச் சேஷ்டை யுடையோன், a person with disordered sexual impulse–Erotopath.

காம விச்சை, காம விருப்பம், sexual desire; venereal oestrum.

காம விச்சையுள்ள, தூர்த்தத் தன முள்ள, salacious, lecherous.

காம விடாய், காம வெறி, sexual craving.

காம விருட்சம், கந்த நாகுலி, icheneumon plant–Vanda roxburghii.

காம விருத்தி, காம மிகுதி, increase of sexual passion.

காம விருந்தம், பாதிரிப் பூ, trumpet flower–Bignonia suaveolens.

fluid like semen supposed to be discharged by women during sexual intercourse–Aura seminis alias Halitus seminis.

காமப் பித்தன், புணர்ச்சியின் பேரிலேயே சதா ஞாபக முடையவன், one who is affected with erotomania–Erotomaniac.

காமப் பித்து, see காமப் பைத்தியம்.

காமப் பிராந்தி, see காமப் பைத்தியம்; 2. மோக மயக்கம், delusion in love.

காமப் பிரியகாரி, அமுக்கிறா, burr wood–Physalis flexuosa.

காமப் புணர்ச்சி, சங்கற்பத்தினா லேற்படும் புணர்ச்சி, sexual union brought about by destiny.

காமப் புரட்டன், 'மாறுபடக் கொள்ளல்' என்னும் யுக்தியால் இயற்கைச் செயலை விட்டு தான் கருதிய வழியாக மாறுபட காம நுகர்ச்சியை விரும்புவோன், a sexual pervert who unlike others, and contrary to the principles and precepts of sexual decorum, chooses his own way of indulging in sexual congress. The following are different kinds:–

1. தன்னைப் போன்ற ஆண் பிள்ளைகளோடு சம்போகம் செய்தல், having sexual intercourse with persons of the same sex–Urnism.

2. இறந்த பிரேதத்தோடு சம்போகம் செய்தல், having sexual connection with a dead body–Necrophilism.

3. மிருக சாதிகளோடுப் புணர்தல், copulation with an animal–Bestiality.

4. ஆண் அல்லது பெண்ணோடு ஆசனப் புணர்ச்சி செய்தல், having copulation between males or with a female by anus; anal coitus–Sodomy.

5. பெண்கள் சிறு நீரைப் பார்த்தலி னாலும் அல்லது சிறு நீர் விடும்போது கவனித்தலி னாலும் மோகங் கொள்ளல், sexual excitement produced by mere looking at the female's urine or by watching a female urinating–Crolognio.

காமப் புரட்டு, காம நுகர்ச்சியின் மாறுபாடு, disorder of the sexual impulse–Erotopathy.

காமப் பூ, மதன காமப் பூ, cowslip creeper–Pergularia minor; 2. புருட விந்து; semen; 3. காமத்தை யூட்டும் யோனி லிங்கம், clitoris in women exciting passion; 4. மதன காமேஸ்வரப் பூ, the flower of a winding plant which causes giddiness and excites voluptuous desires–Pergularia tomentosa; 5. வெண்பிர்க்கு white luffa gourd.

காமப் பேய், see காம பூதம்.

காமப் பேய்ப் பிடித்தோன், one who indulges in amorous fancies; wanton person.

காமப் பைத்தியம், காமப் பித்து, emotional insanity characterised by exhibitions of extravagant affection for persons of the opposite sex or of excessive sexual desire–Erotomania; 3. பெண்களுக்கேற்படும் காமப் பைத்தியம், excessive sexual desire in a female–Nymphomania.

காமப் போர், இருவர் புரியும் லீலை, sexual act indulged in without any restraint; an unrestrained wanton sport.

காம மயக்கம், காம வெறி, delusion in love; infatuation.

காம மரணம், தற்கொலை, self imposed or voluntary death; suicide.

காம மரம், மதன காமப் பூ மரம், love tree–Cycus circinalis. See மதன காமப் பூ.

காமமலடி, பயங்கரமான கனவினால் கர்ப்பம் சிதைந்து அதனால் மலடியா யிருப்பவள், a woman in whom abortion is always caused by fearful dreams and who is therefore considered a barren woman; 2. மித மிஞ்சிய சம்போகத்தினால் கரு வழிந்து பிள்ளைப் பெறாத பெண், a woman whose want of conception is due to excess of sexual intercourse.

காம மிகுபோக விழையர், தூர்த்தர், persons given to extreme indulgence in sexual passion; lascivious persons.

காம மீய்வோன், கோழித் தலைக் கெந்தி, red sulphur found in irregular pieces of brick-dust colour.

காம முள்ள, மோகமுள்ள, amorous.

காமமுள்ளான், மோகங் கொண் டவன், an amorous man; a lascivious person.

காம முற்றவள், மோகங் கொண் டவள், an amorous woman.

காம மூடன், see காமப் புரட்டன்.

காம மோகம், காமத்தினா லுண் டாகும் பிரமை, infatuation through lust.

காம மோகிதன், அடங்காக் காம முள்ளவன், one with an uncontrollable lust.

காம மோதகம், காம சந்தோஷம், sexual happiness; 2. காமத்தை மூட்டும் ஓர் பூடு, a plant with aphrodisiac properties; 3. மோகத்தை அதிகப் படுத்தும் கொழுக்கட்டை, அல்வா முதலிய பலகாரம், a steamed rice cake of conical form filled with pulse or any cake such as Halwa tending to increase or excite passion.

காமம், விந்து, semen virile; 2. காம நோய், love sickness–Libido; 3. கலவி, venery; 4. காமப் பூ, a flower which excites passion and love. See காம மரம்; 5. காம விகாரம், lasciviousness; 6. மோகம், salacity or salaciousness; 7. பெண் காமக் களை, see காமக் களை; 8. மா மரம், mango tree–Mangifera indica; 9. திப்பிலி, long-pepper; 10. காமச் சுரம், amative fever; 11. செடியின் முதற்பெயர், plant's first term from its pleasing appearance and taste as காம மரம், love tree.

காம வெறி, சதா பெண் நினைவு, insane desire for women; extravagant sexual passion too obstinate to be controlled. See காமப் பைத்தியம்.

NOTE–The mani a referred to here is an abnormal exaggeration of love, more limited to the imaginative than to the carnal aspect of human sentiment. No doubt, it is an insanely perverted sexual feeling known as Erotomania–Furor genitalis.

காம வெறுப்பு, காம விச்சை யின்மை, morbid dislike for sexual love–Erotophobia.

காம வேதம், கொக்கோக முனிவர் செய்த கொக் கோக மென்னும் காம நூல், erotic science by Kokkoga Muni.

காம வேழம், நாணல், reed; 2. குசப்புல், kusa grass.

கா மனம், see காமணம்; 2. திப்பிலி, longpepper; 3. see காம விருட்சம்.

காமணி, நவச் சாரம், see காமணி.

காமனை, சிறு கிழங்கு, a small bulbous fleshy root; Goa potato–Plectranthus.

காமன், திப்பிலி, long pepper–Piper longum; 2. வண்டு, bettle; 3. கள், toddy.

காமன் ரதி, கருந் துளசி, black basil–Ocimum nigrum.

காமா கமனம், (காம+அகமனம்) காமத்தின் வழியே நடக்காமல் அவ்விச்சையை வேறு வழியாக மாற்றுதல், the process of deviating sexual motive powers from their sexual aims or objects to new aims other than sexual–Sublimation (Freuds's term). C.f. காம கமனம்.

காமாக் கிரியம், காமப் புணர்ச்சி, copulation.

காமாக் கினி, காமத் தீ அதாவது உடம்பினுள்ளிருக்கும் மூன்று வகைத் தீயினுள் ளொன்று, one of the three fires in the human system, the fire of lust. It indicates extreme sexual passion. The other two fires are பித்தாக்கினி, gastric fire and உதராக்கினி, abdominal fire.

கா மாங்கம், மா மரம், mango tree. See காம சாரம்.

காம மாங்குசம், ஆண் குறி, the genital of a male; 2. நகம், nail.

காமாட்சி, see காமாட்சிப் புல்.

காமாட்சிப் புல், காவட்டம் புல். இது 3-6 அடி உயரம்; வாசனையுள்ளது, சிறிது கசப்பு. வயிற்றுக் கோளாறு களைப் போக்கும், citronella grass–Andropogon nardus. It is 3-6 ft. high; roots aromatic and a little bitter in taste. It is a stomachic; 2. கொடிப் புல், black kuskus–Andropogon iwarankusa; 3. கற்பூரப் புல், lemon grass–Andropogon schoenanthus; 4. சுன்னாறிப் புல், Roussa oil grass–Andropogon muricatus.

காமாட்சிப் புல் தைலம், காவட்டம் புல்லை மற்றச் சரக்குகளோடு சேர்த்துத் தயாரிக்கும் தைலம். இதை வயிற்று வலி, சுளுக்கு இவைகளுக் குபயோகிக்கலாம், a medicated oil extracted from the root of citronella mixed with other ingredients and used for colic and sprain; 2. புல்லினின்று இறக்கிய தைலம், oil of citronella.

காமாதி காரம், காமத்தின் தூண்டுகை, influence of sexual passion or desire.

காமாதி விருட்சம், புல்லூரி, see காமரீசம்.

காமா துர, காம விகார, voluptuous.

காமா துரம், காமவாசை, voluptuousness.

காமா துரன், காமி, inatuated person; 2. பரஸ்திரி கமனன், whore-monger.

காமாந்தகன், காமத்தால் சிந்தை கலங்கியவன், one blinded by lust; libidinous person.

காமாந்தம், குயில், Indian cuckoo; 2. காமக் குருடு, blind with lust; blinded through love.

காமா மிர்தம், விந்து, semen; 2. நாதம், sexual fluid in women.

காமாயு, கருடன், Brahminy kite.

காமாலை, பித்த காமாலை அல்லது மஞ்சட் காமாலை. இதனால் உடம்பின் தோல், சவ்வு, நீர் முதலியவைகள் பித்த நிறம் போல் அதாவது மஞ்சளாகக் காணப்படும். இவ்வியாதி முக்கியமாய்க் குழந்தைகளுக்குக் காணும். தாயின் கர்ப்ப காலத்தில் சாம்பல், மண் முதலிய வற்றைச் சாப்பிடுங் கெட்ட பழக் கங்களினால் குழந்தையின் உடம்பில் இரத்தங் கெட்டு, சீரண சக்தி குறைந்து, பித்தம் அதிகரித்து, அதனால் உடம்பு முழுவதும் மஞ்சள் நிறமாகக் காணும்.

பெரியவர்கட்கோ வெனில், பல காரணங்களுண்டு, அவையாவன:- ஈயம், பித்தளை, வங்கம், தாமிரம் இவைகளின் புகைகளிலிருந்து வருவதாலும், நல்லெண்ணெய், நவச்சாரம், தாளகம் இவைகளின் புகையை உட்கொள்வதாலும், சதா உட்கார்ந்த படியே இருப்பதாலும், பித்த பதார்த்தங்களை அதிகமாகப் புசிப்பதாலும், அதிக மனோ முயற்சியால் பித்தம் கதிப்பதாலும் பித்தாசயம் தடைப்பட்டு இவ் வியாதி சாதாரணமாகக் காணுவ துண்டு.

"விளம்பவே பாண்டு முற்றியி
ருக்கும் போது பீறியே பித்தவஸ்து
தனைப்புசித்தால் புளம்பவே
மங்கையுடன்புணர்ச்சி செய்தால்
பூண்டிடுமே காமாலை யென்னும்
17. ஒற்றைக் கால், orie-legged; one-legged while the other leg remaining-folded (a posture).

18. மடிப்புக் கால், folder-leg.

19. குந்து கால், tip or end of the toe–Tiptoe.

20. அட்டங் கால், crossed leg.

21. அட்டணைக் கால், same as No.17.

22. உள்ளங் கால், the bottom of the foot–Sole.

23. கணுக் கால், the joint connecting the foot with the leg–Ankle.

24. கணைக் கால், the fore-part of the leg–Shin.

25. கெண்டைக் கால், the thick fleshy part of the leg behind, below the knee–Calf.

26. குதி கால், the hind part of the foot–Heel.

27. புறங் கால், the upper part of the foot–In-step.

28. பின் கால், the hind-leg.

29. முன் கால், the front or fore-leg.

NOTE– Nos. 1-17 refer to the shape, structure and deformity of the leg. Nos. 18-21 to the mode of using it and Nos. 22-27 to different parts of the leg; whereas Nos. 28 & 29 to the legs of quadupeds.

கால் கடுப்பு, கால் குடைச்சல், boring pain in the leg; 2. பாதம் கடுத்தல், acute pain in the foot.

கால் கடுவன், குழந்தைகட்கு முழங் காலின் கீழுள்ள கணைக் காலில் கருப்புப் புள்ளிகள் ஏற்பட்டு, குருக் களாகத் திரண்டு துன்புறுத்தும் படையைப் போன்ற ஓர் நோய். இது பெண்களுக்குங் காணும், a very rare disease of the skin in children characterised by dark spots about the size of pin's head evidently vascular, developed in the dilated vessels of the skin. It also occurs in females–Angiokeratoma See காற் கடுவன்.

கால் கரப்பன், முழங் காலுக்குக் கீழ் காணும் கரப்பன், an assemblage of papules surrounding each leg like a shin-guard.

கால் கர மசதி, கால் கை ஓய்ச்சல், exhaustion of the limbs.

கால் கழுவுதல், குதத்தி லொட்டிய மலத்தைக் கழுவிச் சுத்தி செய்தல், washing one's posterior after evacuation.

கால் கிளர்தல், ஓடல், running.

கால் குடைச்சல், காலில் ஏற்படும் குத்தல் வலி, boring pain in the leg; 2. வாத வலி, rheumatic pain in the leg.

கால் கூசுதல், உள்ளங் காலின் உணர்ச்சி, a peculiar sensation of the sole.

கால் கெஞ்சுதல், நடக்க முடியாமல் வருந்துதல், feeling exhausted after a long walk and unable to proceed further.

கால் கை குறண்டல், கை கால் சுருட்டி இழுத்தல், painful spasmodic contractions of the limbs; spasms of the leg and the arm–Cramps.

கால் கை போட்டு கிடத்தல், கால் கை நீட்டிய படி மல்லாந்து கிடத்தல், stretching the body and limbs carelessly in a horizontal position; lying with the limbs stretched–Sprawl.

கால் கைப் பிடிப்பு, வாத நோய், painful inflammatory affection of the muscles of the limbs–Rheumatism.

கால் கை முடக்கு, கால் கை எழாமற் செய்யும் ஓர் சூலை நோய், a painful disease as rheumatism affecting the joints; atrophy of the limbs as from paralysis.

கால் கை யோச்சல், பல வீனத்தால் கால் கை சோர்வடைதல், exhaustion of the limbs through bodily weakness.

கால் கை விட்டு போதல், கால் கை சோர்வடைதல், exhaustion of the limbs.

கால் கை விழுதல், பாரிச வாயுவினால் கால் கை சோர் வடைதல், loss of sensation of the limbs through paralysis.

கால் சீத்தல், வேரோடு களைதல்; அடியோடு போக்குதல், rooting out as a disease; 2. துடைத்தல், effacing; obliterating.

கால் சீரகம், see கருஞ்சீரகம்.

கால் தடுக்கல், கால் இடறுதல், tripping in walking or running; walking unsteadily.

கால் தட்டல், முட்டிக் கால் தட்டல், the condition in which the knees come together while the ankles are far apart knock knee–Genu valgum.

கால் தாங்குதல், காலை இழுத்து நடத்தல், limping through stiffened legs.

கால் தாபரி, தொடரிப் பூடு, small jujube tree–Scutia indica.

கால் தாழ்தல், மூழ்கிப் போதல், drowning with being unable to swim.

கால் துரத்தி, see காத் தொட்டி.

கால் தோற்றம், பிரசவத்தில் குழந்தையின் கால் வெளிக் காணல், (*In Midwifery*) version which causes the feet to present–Podalic version.

கால் நடுக்கம், கிழத் தனத்தினாலும், பல வீனத்தாலும், காலிற் காணும் நடுக்கம், trembling of the leg due to old age or weakness.

கால் நடுக்கு வாதம், கால் கை எப்பொழுதும் உதறும்படி செய்து, நடக்க முடியாமல் தள்ளாடச் செய்யும் நரம்பைப் பற்றிய ஓர் வாத நோய், a nervous disease marked by a continuous trembling of the limbs, rigidity of the muscles and difficult in maintaining one's balance while walking; Shaking palsy–Paralysis agitans.

கால் நடை, ஆடு மாடு முதலியன, cattle.

கால் நிறுத்தல், வாயு பதார்த் தங்களை நீக்கி பத்திய மிருத்தல், observance and regulation of diet by avoiding flatulent substances.

கால் நோய், காலில் ஏற்படும் நோய், disease of the legs in general; 2.காலி லோடும் நிணநீர்த் தாரைகளின் தாபிதத்தினால் உண்டாகும் கால் வலி, pain in the legs due to the inflammation of the lymphatic vessels–Lymphangitis.

கால் பாத சன்னி வாதம், முழங் காலின் கீழ் நெருப்பைப்போல் சுடுண்டாகி குத்தலும், வலியும் ஏற்பட்டு நடக்க வொட்டாமற் செய்யு மோர் வாத நோய், a kind of rheumatism affecting the lower limb with inflammation and acute pain and rendering the patient unable to walk.

கால் பாவுதல், கால் பூமியில் படும்படிச்செய்தல், setting foot on the ground.

கால் பானம், (*Eng.*) மருந்திற் குபயோகிக்கும் ரோசனப் பிசின், resin or gum used in medicine–Galbanum.

கால் பிடித்தல், கால் அல்லது பாதத்தை வருடல், pressing and rubbing the legs or feet softly to relieve pain, and induce sleep–Shampooing.

கால் பிடிப்பு, வாதத்தினால் கால் இழுத்துப் பிடித்தல், stiffening or

contraction of the muscles of the leg due to rheumatism or other nervous affections.

கால் பிளவு, குதிகால் வெடிப்பு. இது சில வேளை நடக்க முடியாமற் செய்யும், a crack of fissure in the heel sometimes causing one unable to walk.

கால் பின்னல், பலவீனம் அல்லது அச்சத்தால் கால் முறுக்கிக் கொள்ளல், becoming cross-legged through weakness, nervous debility or fear; 2. முட்டிக் கால் தட்டல், to be knock need. See கால் தட்டல்.

கால் பேனம், see கால் பானம்.

கால் மடக்கு, see கடப்புக் கால்; 2. கால் சாதாரணமாய் மடக்குதல், folding of the legs.

கால் மண்டலம், ஒரு மண்டலத்தின் கால்பாகம் அதாவது 10 அல்லது 12 நாள், a period of 10 or 12 days.

கால் மரத்தல், கால் திமிர் கொள்ளல், numbness of the feet or legs.

கால் மாடு தலை மாடாக்கல், படுக்கையில் கால் பக்கத்தை தலைப் பக்கமாக மாற்றல், taking an inverted position while lying on the bed.

கால்மாடு தலைமாடு, அடிமுடி மாற்றம், upside down–Topsy turvy.

கால் மாட்டு வைத்தியன், போலி வைத்தியன், a pretender to medical skill–Quack.

கால் மிதி, அடிச் சுவடு, foot print; 2. காலினால் மிதித்தால், stamping with the foot.

கால் முடக்கு வாதம், காலை முடக்கி நொண்டியாக அல்லது படுத்த படியாக கிடக்கச் செய்யு மோர் வாத நோய், a kind of rheumatism causing stiffening of the jonints or prostration of the limbs thereby rendering the patient unable to get up from his bed.

கால் முடங்கு வாதம், வாதத்தினால் நரம்பையிழுத்து மேலே சுருட்டி வைப்பதனால் கால் குடைச்சல் கண்டு நடக்க முடியாமற் செய்யுமோர் வாத நோய், (யூகிமுனி1200), a kind of nervous contraction of the legs with actue pain rendering the patient unable to walk.

கால் முடம், கால் நொண்டி, lameness–Talipes.

கால் முளி, காற் பரடு, ankle.

கால் முளைத்தல், நடை பழகத் தொடங்கல், begnning to walk as a child; 2. காலில் பல முண்டாதல், strengthening of the leg after recovery from atrophy or paralysis.

கால் முறிதல், கால் முறிவு, fracture of the leg.

கால்யம், விடியற் காலம், the break of day.

கால் வயம், துவரை, dholl–Cajanus indicus.

கால் வலி, கால் நோய், pain in the leg.

கால் வழி, சந்ததி மூலம் அல்லது வமிச பரம்பரை, heredity; 2. சிறு வழி அதாவது ஒற்றையடி பாதை, foot-path; 3. காற் சுவடு, foot-print.

கால் வழி நூல் வழி, பரம்பரை வழி யாய் வந்த அநுபவ முறை, நூன் முறை, (*In Medicine*) hereditary or customary, Practice and Theory as in ''கால் வழியும் நூல் வழியும் கண்டு தேரே''.

கால் வாங்கல், இறத்தல், dying; 2. காற்று வாங்கல், enjoying the breeze.

கால் வாசி, நாலில் ஒரு பங்கு, (collq) one fourth part; quarter.

கால் வாதம், காலிற் காணும் வாத வலி, pain and inflammation of the joints or the muscles of the leg; rheumatic pain in the leg.

கால்வாய்க்குப் போதல், மலங் கழித்தல், easing.

கால் வாய்க் கோமாரி, ஆடு மாடு களுக்குப் பாதத்திலும், வாயிலும் காணும் ஓர் வகைக் கோமாரி நோய், foot and mouth disease of cattle.

NOTE–Absence of purging and the affection of the feet as distinguished from rinder-past.

கால் விடுதல், கால் சோர்வடைதல், weakening of the legs through exhaustion; 2. கால்கள் அல்லது பாதங்கள் செய லறுதல், being deprived of the use of the limbs particularly of legs and feet; 3. முற்றிலும் ஒழித்தல், giving up or getting rid of entirely.

கால் விரல், பாதத்தின் விரல், toe.

கால் விருத்தி, பொரும் பிலி (ஓர் பயற்றஞ் செடி), a cereal plant.

கால் விழுதல், பாரிச வாயுவினால் கால் சோர்வடைதல், loss of sensation of the leg as from paralysis.

கால் விழுந்து போதல், மூச்சொடுங் கிப் போதல், failure of respiration, as occurring at the time of death; 2. see கால் விழுதல்.

கால் வீக்கம், தமிழ் நூலின்படி சாதா ரணமாய் தாபிதத் தினாலேற்படும் வீக்கம். இது அடியிற் கண்டபடி வேறுவித காரணங்களினாலு முண்டாகலாம், (*In Tamil Medicine*) swelling of the leg generally due to inflammation of wound or injury; but it may also occur from other causes as specified under:–

1. மேக நீர் சம்பந்தத்தால் காலி லுண்டாகும் நீங்காத வீக்கம், permanent edema (swelling) of the feet or legs through venereal causes–Trophedema.
2. வாத சம்பந்தத்தால் காலிற் காணும் வீக்கம், swelling through rheumatism, elephantiasis etc.
3. பாண்டு ரோகத்தினால் காலில் பித்த நீர் இறங்கிக் காணும் வீக்கம், swelling caused by escape of morbid fluid through the coats of the vessels into the surrounding tissues as in dropsy.
4. பெண்கள் கர்ப்பிணியா யிருக்குங் காலத்தில் காணும் வீக்கம், swelling occurring in women during the later months of their pregnancy.

5. பெண்களுக்கு மாதவிடாய் ஒயுங் காலத்திற் காணும் வீக்கம், swelling in women occurring during the period of the change of life *i.e.* the period of cessation of the monthly discharge (Menopause).
6. பெண்களுக்கு சூதகம் சரியாகக் காணாமல் தடைப் படுங் காலத்திற் காணும் வீக்கம், swelling in women through scanty or failure of the monthly course (Amennorrhoea).
7. சொறி கரப்பான் சம்பந்தத்தினால் காணும் வீக்கம், swelling from eczema, scurvy etc.
8. விஷ சுரத்தினால் வயிற்றில் காய்ச்சல் கட்டி ஏற்படுவதினாற் காணும் வீக்கம், swelling of the leg due to enlargement of the spleen arising from frequent attacks of Malarial fever.
9. பலவீனம், சோகை, விஷ சுரம், முதலிய காரணங்களை முன்னிட்டும் காணும் வீக்கம், swelling of the feet from obvious derangement of health, being often due to general debility, anemia weakness after attacks of malarial fever etc.

NOTE–It may also be caused in Gonnorrheal synovitis, articular gout, rheumatism due to subcutaneous exudations. Swelling of the feet is a common occurrence especially towards night, but unless conneted with obvious derangement of the health, it does not call for any special medical treatment.

கால் வெடிப்பு, பாதத்திற் காணும் வெடிப்பு. இது பித்தா திக்கத்தினால் குதி காலிலும், உள்ளங் காலிலும் கீற்று கீற்றாக வெடித்துப் புண்ணாகி இரத்தத்தைக் கசியச் செய்வதுடன், நடப்பதற்கு மிக்கக் கஷ்டத்தையும் கொடுக்கும், இது பனிக் காலத்தில் அதிகமாகும். cracks or fissures found in the feet. It is caused by splitting of the skin on the heel and sometimes even on the sole of the foot due to aggravated condition of bile in the system. The sore so caused is sometimes attended with bleeding and inability to walk easily. The condition seems to grow worse in the dew season.

காவகம், see காவகா.

காவகா, சேங் கொட்டை, dhoby's nut–Semecarpus anacardium.

காவகா கிதம், திருகு கள்ளி, twisted square. spurge or twisting milk-hedge–Euphor. bia tortilis.

காவட்டந் தைலம், காவட்டம் புல் லெண்ணெய், oil of citronella grass.

காவட்டம் புல், காமாட்சிப் புல், citronella grass or shed grass–Andropogon nardus; 2. கற்பூரப் புல், lemon grass–Andropogon schoenanthus.

காவட்டம் புல், காமாட்சிப் புல். இது ஓர் வாசனைப் புல். இதன் அடி வேர் ஒவ்வொரு வருஷமும் துளிர்க்கும். 5-7 அடி உயரம். இது திருவாங்கூர், கொரநாடு, வங்காளம் இவ் விடங்களில் பயிராகும். இதினின்று

ஓர் வாசனை யெண்ணை எடுக்கலாம்; இவ் வெண்ணெய் சிலோன் தேசத்திலிருந்து ஏற்றுமதி யாகிறது. இவ்விலையின் கஷாயம் வாசனையாயும், கசப்பாகவும் இருக்கும்; குழந்தைகட்கு அரோசி கத்திற்கு கொடுக்கலாம்; வியர் வையை அதிகரிக்கும். இதன் எண்ணையை கைகால் பிடிப்புக்கு மேற் பூசலாம்; நமது நாட்டில் இவ் விலையை தேயிலைக்கு பதிலா கவும் உபயோகிப்ப துண்டு; மோரில் சேர்த்து அரைத்து படைக்கும் பூசலாம். இப்புல்லின் காம்புகளை இடித்து வயிற்று வலிக்கு உட் கொள்ளலாம். இதன் இலைகளை வாலையிலிட்டு தைல மிறக்கி வயிற்று வலி, பொருமல், இசிவு முதலிய அசீரணத் தினாலுண்டாகும் குற்றங்களுக்கு சர்க்கரை யோடுச் சேர்த்து உபயோகிக்கலாம். இதன் தைலம் கீல் வாயு, ஒற்றைத் தலை வலி, இவைகளைத் தீர்க்கும், அன்றியும், பொறுக்க முடியாத எவ்வித வலியும், வேதனையும் இதனால் குணமாகும்; தேங்கா யெண் ணெயிற் கூட்டி வாத நோய்க்கும் பூசலாம். இவ்விலையைக் கஷாயமிட்டுக் கொடுக்க நாவொட்டிக் காய்ச்சல் போம், citronella–Andropogon citratis. Its root is perennial; 5-7 feet high; cultivated in the Coromandel coast, Travancore and Bengal. A fragrant oil is extracted from this grass and is exported from Ceylon to foreign countries. An infusion of the fragrant leaves which are aromatic and bitter is given to children as an excellant stomachic; it is also diaphoretic. The essential oil prepared from them is applied externally in rheumatism. When fresh and young, the leaves are used as a substitute for tea; mixed with butter-milk, the leaves are used in cases of ringworm. The pedicles are pulverised and used for stomach ache. From its leaves are extracted by distillation oil which may be found useful in colic, flatulence, convulsions and gastric irritabilities, when taken internally with sugar. This oil is also applied externally for arthritic complaints and one-sided head-ache. It cures all ailments and is externally a useful rube-facient. Mixed with cocoanut oil it makes an excellent application for chronic rheumatism. Decoction from the leaves is prescribed for fever attended with intense thirst.

காவட்டம் புல் லெண்ணெய், கற்பூரப் புல்லெண்ணெய், oil of lemon grass; 2. காமாட்சிப் புல் லெண்ணெய், oil of citronella grass.

காவட்டை, see காவட்டம் புல்

காவணம், தெள்ளுக் கொடி, negro-bean; cowtch creeper–Mucana monosperma; 2. சோலை, grove.

கா வணவன், பயிர், செடி இவை களை அழிக்கும் ஓர் சிறு புழு, a small destructive worm found in plants and growing corn.

காவணன், புழுக் கூடு, nest of an insect as wasp.

காவத்திரம், ஈரப் பலா, monkey-jack–artocarpus lakoocha.

காவம், காட்டழல், big forest-fire kindled by friction.

காவலம், தோண்டிப் பூடு, blood-drop ordure tree–Sterculia guttata; 2. பூந்தாளி, stringing fruited ordure tree–Sterculia urens.

காவலன், see காவலாளி.

காவ லாளி, இரவிலே விழித்திருந்து நோயாளிகளைப் பாதுகாக்கும் ஆண் அல்லது பெண், a male or female walking in the night and nursing the patients.

காவ வுசில், வாழை, plantain tree–Musa paradisiacs.

காவளை, பேய்த் தும்பை, devi leucas–Leucas linifolia; 2. see காய் வேளை; 3. see காவளைச் சுக்கான்.

காவளைச் சுக்கான், கருஞ்சுக்கான், black lime stone.

காவற்கலி, வாழை, see காவ வுசில்.

காவற் குலிகம், திப்பிலி, long-pepper–Piper longum; 2. நாவல் மரம், jaumoon tree–Eugenia jambolana.

காவற் பெண், செவிலி, nurse.

காவனை, காட்டு மல்லிகை, wild, jasmine – Jasminum angu stifolium.

காவன், சிலந்திப் பூச்சி, spider.

காவா, காட்டு மல்லிகை, wild jasmine

காவாடு புல், see காவாய்.

காவாய் ஓர் புல், a kind of unknown grass; 2. கழுதை, ass

காவாரம், நீர்ப் பாசி, duckweed–Lemnaceaea genus.

காவாலன் கொடி, see கவலைக் கொடி.

காவாவி, திரு நீற்றுப் பச்சை, holy ashes leaf–Ocimum basilicum alias Basilicum indicum.

காவாளி, see காவானை.

காவானை, see காவா; 2. see காய் வேளை.

காவி, அவுரி, Indigo plant–Indigofera tinctoria; 2. மருந்துண்டை, a medicinal pill; 3. கருங் குவளை, which see; 4. see கரு நொச்சி; 5. see கருங்காலி; 6. see காட்டு முருங்கை; 7. செம்பு, copper; 8. கள், toddy; 9. காவிச் சாயம், mendicants red dye; 10. மர மஞ்சள், tree-turmeric; 11. காவிக் கல், red ochre; 12. காவி மண், Armenian bole–Armenia rubra.

காவி, செம் மண், இது அடியிற் கண்டபடி பலவகைப்படும், red earth. It consists of different kinds as mentioned below:-

1. கோபிக் காவி, a faint yellow ochre.
2. பூரான் காவி (சுவர்ண கைரிகம்) gold ochre or common yellow-ochre.
3. சீமைக் காவி, Armenian stone or Armenian bole; called also kabul earth.

4. சிவப்புக் காவி (*Sans.* இரத்த தாது) Red mineral or red-ochre. This consists of two kinds viz:- (a) கற் காவி, hard red-ochre; (b) பூங் காவி, soft red-ochre. This contains much of oxide of iron.

5. குங்குமக் காவி, see No.4.

காவிகம், see கருந் தினை.

காவிகா, see காவிகம்.

காவிக் கருப்பி, கொடி வேலி, Cylon lead. wort–Plumbago zeylanica.

காவிக் கல், செம்மண், red ochre; red chalk. See காவி; 2. செங் கழுநீர்க் கல், stone of the colour of red Indian water lily.

NOTE–It is mineral dye. The essential ingredient is per-oxide of iron (அயம்) whether as an anhydrous red homatite or the hydrated brown and yellow limonites, See ஆதிரலிச சிலை.

காவிச் சீமைச் சுண்ணாம்பு, சிகப்பும் மஞ்சள் நிறமும் கலந்த சுண்ணாம்பு. hydrated brown and yellow limonites.

காவிச் சீலை, செம் மண்சீலை, a dark red cloth; cloth dyed in red ochre.

காவிதம், கருங் குவளை, blak water-lily.

காவிப் பல், காவி நிறமடைந்த பற்கள், red soild teeth; 2. ஊத்தை படிந்த பல், filthy teeth.

காவிப் பிடித்தல், see காவி யேறுதல்.

காவி மண், செம் மண், red ochre; red earth

காவி யடைதல், see காவி யேறுதல்.

காவியம், கும்பகம், (*In Yoga practice*) suppression of breath.

காவி யேறுதல், செந்நிற மடைதல் to acquire a reddish-brown colour as of the teeth.

காவிரம், கருப் பறுகு, black panic-grass.

காவில்லி, see காவலம்.

காவிளாய், see காவிளை.

காவிளை, காய்வேளை, which see; 2. see காட்டு மல்லிகை; 3. கொழுஞ்சி, purple wild indigo–Tephrosia purpurea.

காவீகம், சேங் கொட்டை, dhoby;s nut–Semecarpus anacordium.

காவீயகம், மர மஞ்சள், tree-turmeric–Coscinium fenes tratum.

காவீரம், see அலரி; 2 மஞ்சள், saffron.

காவு, ஓர் மந்திர மை, a black magic paint; collyrium: 2. பீத ரோகணி, (*San*) Himalayan plant used for diseases of the eye.

காவுப் பொட்டு, பூசாரி நெற்றியி லணியும் அஞ்சனப் பொட்டு, a magic paint worn on the forehead by a temple priest.

காவூமி, see காவு.

காவேரம், குங்குமம், a red powder used on the forehead.

காவேரி மணல், அய மணல், iron sand.

கா வேளை, see காய் வேளை.

கா வோலை, காய்ந்த பன வோலை, dried palm leaf.

காவ் சபான், ஓர் யுனானிச் சரக்கு. இது வெண் புள்ளியும், தடிப்பும் பச்சைச் சாயலும், சிறு கசப்பு முள்ள ஓர் செடியின் இலை, a Unani drug. it is a thick leaf of greenish tinge with white spots, bitter in taste.

காழகம், கருமை, blackness; 2. சோறு, boiled rice.

காழியர், வண்ணார், washermen.

காழ், ஒளி, brightness; 2. இரும் பிலி, whcih see; 3. பருக்கைக் கல், small loose pebble with or without sand; 4. பளிங்கு, crystal; 5. மர வயிரம், core of a tree; 6. விதை, seed; 7. வாகை, sirissa tree; 8. இரத்தினம், gem; 9. முத்து, pearl; 10. இரும்புக் கம்பி, iron wire; 11. கொட்டை, stone nut; 12. பழத் தோல், skin of a fruit; 13. குற்றம், blemish, defect; 14. பதுமக் காழ், seed of the Nelumbium.

காழ் கொள்ளல், முதிர்ச்சி யடைதல், maturing; 2. வயிரம் பாய்தல், formation of core inside a tree.

காழ் கோளி, நெட்டி லிங்கம், Indian mast tree.

காழ்த்தல், கார்த்தல், being pungent; becoming acrid; 2. வயிரித்தல், to be firm and strong in mind; 3. முற்றுதல், becoming hard or matured; growing firm and solid.

காழ்ப்பு, காரம் அல்லது உறைப்பு, pungency; 2. தழும்பு, scar; 3. சாரம், essense; 4. மர வயிரம், core of a tree.

காழ்வை -அகில் பூ, flower of Agil tree

காள கண்டகி, see அவுரி.

காளகண்ட சுரம், கழுத்தைக் கரு நிறமாகச் செய்யுமோர் சுரம், a fever marked by dark colouration of the neck; 2. மண்ணீரல் வீங்கி காணும் சுரம், fever marked by enlargement of the spleen.

காள கண்டம், குயில், Indian cuckoo; 2. தலைச்சன் பிள்ளையின் தலை மண்டையோட்டை எரித்துச் சாம்பலாக்கிப் பிறகு அதைச் சுத்த சலத்தில் கலக்கித் தெளிவிறுத்துக் காய்ச்சி எடுத்த உப்பை, திரும்பத் திரும்ப ஏமு தரம் தண்ணீரிற் கரைத்துக் காய்ச்சி யெடுத்த உப்பே ஏழாங் காய்ச்ச லுப்பு. இவ்வுப்பின் கசிவை இறுத்துப் பனியில் வைத் துண்டான காரமான நீர்தான் செய நீர், a strong and pungent fluid. It is obtained by the following process:– The skull of the first born child is burnt to ashes which is then mixed with distilled water and allowed to clear. The clear solution on the top is then filtered and boiled seven times and then cooled, when crystals of salt are obtained; and this salt when exposed to air gradually absorbs moisture and dissolves; and the solution so derived is again filtered and this, when exposed to night's dew is turned into a pungent liquid. *C.f.* ஏழாங் காய்ச்ச லுப்பு.

காள கந்தம், வெள் வேல், white babool- Acacia leucophloea.

காளகம், மருக் காரை, emeitic nut- Randia dumetorum; 2. கருமை, blackness 3. சேங் கொட்டை, marking nut- Semecarpus anacardium; 4. சோறு, boiled rice; 5. ஈரல், liver, 6. சிவப்புச் சோளம், red mazine.

காள கன்னாதம், கறுப்புக் கல் நாதம், fossil exudation from black granite stone;2. வெண் கல் மலை, white stone.

காள காசம்,see அவுரி.

காள காதம், பரம்பை அதாவது வன்னி, Arjuna penance tree - Prosopis spicigera.

காள கூடம், கொடிய நஞ்சு, a deadly poison.

காள சத்திரம்,see கமுகு.

காள சிகம், see எட்டி.

காள சியாமா, கருங் கொடி, common delight of the woods- Hiptage madablata.

காள சூரம், சிவதை வேர், Indian jalap or Indian rhurbarb- Ipomaea turpethum.

காளச் சீலை, வைடூரியம், a variety of chalcedony Cat's eye.

காளத் தீர்க்கி, குளிரி, water archer- Saggitaria obtusifolia; 2. மயில் விசிறி Pea cock's feather fan 3. விஷந் தீர்க்கு மருந்து, antidote.

காள பதம், மாடப் புறா, blue rock- pigeon Columba intermedia.

காள மேகத்தி, see கரு நாகம்.

காள மேக நாராயண சிந்தூரம், ஆயுள் வேதப் படி தயாரிக்கும் ஓர் கரு நிறமான செந்தூரம், (In Ayurveda) a dark reddish metallic oxide.

காள மேகம் கரு முகில், dark cloud heavy with water; 2. செங்குன்றி, red- Indian licorice; 3. சேரான் கொட்டை, markingnut- Semi carpu anacardium; 4. கொள்ளிக் கட்டைக் கரியைப் போல் மூத்திரம் கறுப்பாகவிறங்கும் ஓர் நோய், a disease characterised by a discharge of dark coloured urine.

காள மோதகனம், கருநாய், black dog.

காளம், கருமை, blackness,2.அவுரி which see; 3 see எட்டி, 4. நஞ்சு poison ; 5. மேகம் cloud; 6. சிறு சின்னி, birch - leaved acalypha - Acalypha fruiticosa; 7. கழுகு, eagle.

காளவடி வழுகி, பொன்னாங் காணி, mary- goldverbesina- Illecebrum sessile.

காள வனம், சுடுகாடு, cremation ground.

காள வாசல், கண்ணாம்பு காளவாய் limekilin.

காள வாயன், கழுதை, ass, so called from its trumpet voice; 2. பெருங் கூச்ச லிடுபவன், a person with a loud voice.

காள வாய் , see காள வாயன், 2. சூளை, kiln.

காளவுலை, சரவுலை அதாவது உலோகங்களையுருக்கும் உலைக் களம், a fire- place where double bellowes are used; a contrivance for a vehement fire for purposes of melting - Furnace.

காளா, ஓர் கடல் மீன், robaul fish- Polynemus.See காலா.

காளா கிகம், திருவாத்தி. see ஆத்தி,

காளாஞ்சகம், எண்பது வகை வாத நோய்களுள் ஒன்று, இதனால் கை கால் குடைச்சல் கண்டு நடக்க வொட்டாமல் கரடு கட்டி முடமாக்கி, உடம்பு வெளுத்து மயக்கத்தை உண்டாக்கும்,(பூகி. முனி 800), according to the Tamil Medical science, it is one of the 80 kinds of rheumatism. It is characterised by boring pain in the limbs, inability to walk or move about owing to the stiffening of the leg anemia, giddiness etc.

காளாஞ்சி, எச்சில் படிக்கம், spittoon; 2.see காளாஞ் சகம்,

காளாத்திரி, பாம்பின் கீழ் வரிசை நச்சுப் பற்களிலொன்று, the second of the four fangs in the lower row of the teeth in a cobra.

காளா ராத்திரி, see காளாத்திரி,

காளாமுகி, பயங்கர முக ரூபம், a form of monster- face.

காளாம்பி, காளான்,mushroom.

காளான், ஓர் விரண நோய், spongy excresence as proud flesh formed in wounds;2. கறிக் காளான், edible fungus - Agaricas campestris

காளான், இப் பூடு முக்கியமாய் சதுப்பு நிலங்களில் மழை பெய்து நின்ற சில நாட்களுக்குப் பின் மிகுதியாக உண்டாவது வழக்கம். இதைச் சாதாரணமாக புற்றுகளின் மேற்காணலாம், இது வடிவம், குணம், நிலவளப்பம் இவை களுக்குத் தக்கபடி பலவிதமாக இருந்தாலும், இவற்றுள் சாப்பிடத் தகுந்தது சில வகைகளே. மற்ற வகைகள் விஷகுணம் வாய்ந்துள்ள தாகையால் அபாயகரமானவை, இது ஓர்வித நாற்ற முள்ளதால் உண்பதற்கு சிறிது அருவருப்பாய் இருக்கும். வடதேசத்தில் இவை களைக் காயவைத்து மருந்தாக உபயோகிப்பார்கள், இதற்கு நீரைப் பிரிக்குங் குணமும்,மாத விடாயை அதிகப்படுத்தும் தன்மையும் உண்டு, இது மூத்திரப் பையி லுண்டாகும் கற்களை உடைத்து வெளிப்படுத்தும் ஓர் சிறந்த மூலிகை. இதைத் தண்ணீரிற் கலந்து வாய் கொப்பளிப்பதனால் தொண்டை நோய்கள் குணமாகும். இதில் அடியிற் கண்டபடி அனேக வகைகள் உண்டு.mushroom; fungus- Agaricus campestris. It is found largely grown in swampy soils, but generally shoots out from the earth a few days after the rain. They are found common on ant -hills. They are classified according to the description of the plant, its quality and the nature of the soil, but only vere few of them are edible, many being poisonous and dangerous. From

their fetid odour they may not be relished so desirably

In Northern India's they are dried and used as medicine. They are used as diuretic and emmenagogue. They break stone in the bladder; mixed in water they are used as a gargle in throat affections. The following are the different kinds of mushroom:-

1. அவற் காளான், flat mushroom.

2. கடற் காளான், sea mushroom.

3. குடைக் காளான், umbrella.

4. நகக் காளான், nail mushroom.

5. நிலக் காளான், earth mushroom.

6. வரிக் காளான், striped mushroom.

7. புற்றுக் காளான், ant- hill, mushroom.

8. பேய்க் காளான், demon cap, mushroom.

9. மரக் காளான், wood mushroom

10. மஞ்சட் காளான் ,yellow mushroom.

11. பச்சரிசிக் காளான் , raw - rice mush room

12. புழுங்கற் காளான் boiled - rice

13. மிதி காளான், trodden mushroom.

14. மலைக் காளான்,mountain mushroom.

15. வலைக் காளான், raven sest mushroom.

16. பொரிக் காளான், spotted, mushroom.

17. கறிக் காளான்,edible mushroom.

18. நாய் குடைக் காளான், dog umbrella mushroom - Agaricus campestris.

19. இலைக் காளான், leaf mushroom.

20, குப்பைக் காளான், dung - hill mush room.

21, முட்டைக் காளான், egg mushroom.

NOTE:- The following are the characteristics of wholesome fungi:-

1. Found growing in fields or in open grassy places of gorests.

2. Found scattered each rising direct from the ground never collected into clumps nor gound growing upon trees.

3. The stem breaks easily when touched; it springs from the centre of the pileus; the cap is thick relative to the gills.

4. They should not be acid flavour or smell.

5. They should have brighr rosy or pink gills without yellow stain when brusised.

The principal edible genera are:- Agaricus, Clavaria. Coprinus, Fistulina and Hydnum.

காளான் சம்பா - காளான் நாற்ற முள்ள ஓர் சம்பா, a paddy with fungus odour.

காளான் பஞ்சு, தீத் தட்டிப் பஞ்சு, touch wood prepared from fungus growing on trees; German tinder- Amadou.

காளி, கக்கரி,cucumber; 2. எட்டி, nuxvomica; 3. மணித் தக்காளி , fox - grape. Solanum nigrum; 4. சிங்கம் lion; 5. see காளாத்திரி, 6. see களாவிப்புதி, 7. காட்டு முருக்கு, palaus tree; 8, நாகத்தின் பல், cobra's fang; 9. நஞ்சு, poison.

காளிகம், மணித் தக்காளி, fox - grape - Solanum nigrum ; 2. மேகம், cloud;3. பளிங்கு, crystal; 4.ஈரல் liver. 5. பெருந்தும்பை, larter leucas.

காளிகா, மணித் தக்காளி, see காளிகம்; 2. குருவந் தெல்லு, West Indian cocoon–Entada scandens.

காளிக்கம், ஓர் வித நீலச் சாயம், a kind of dark-blue dye; 2. செம்பு மலை, mountain containing copper ore; 3. பித்தளை, brass; 4. கறுப்பு, blackness.

காளிக் காரம், ஓர் விஷக் காரம், a poisonous caustic.

காளிதம், களிம்பு, verdigris; 2. அயக்களிம்பு, iron rust; 3. செம்பின் களிம்பு, sub-acetate of copper.

காளிந்தம், ஏலச் செடி, cardomom plant.

காளிந் தாகிதம், தில்லை மரம், tiger's milk spurge–Excoecaria agallocha.

காளிந்தி, தேக்கு, teakwood– Teotona grandis; 2. வாகை, sirissa tree–Albizzia lebbeck; 3. குளிரி, water archer–Saggitaria obtusifolia; 4. நீரப் பசு, water-cow (*unknown*).

காளிமம், கறுப்பு, blackness; 2. களிம்பு, verdigiris.

காளிமை, see காளிமம்; 2. துரு, rust.

காளி மோகம், திருநீற்றுப் பச்சை, holy ashes leaf–Ocimum basilicum.

காளியம், பளிங்கு, crystal.

காளிரம், மணித் தக்காளி, see காளிகம்.

காளி ராத்திரி, see காளாத்திரி.

காளினி, see காளினியம்.

காளினியம், கத்தரி; brinjal– Solanum melongena; 2. கட்டுக் கொடி, which see; 3.தீ முறிப் பூடு, an unknown plant neutralising the effect of fire.

காளை, எருது, bull; ox; 2. குமரன், man in vigour of your; 3. ஆண் மகன், man; 4. மூளை மாங்கிஷம், brain; 4. கட்டிளமையோன், a man of robust health; 5. பதினாறு வயதிற்குட பட்டவன், a juvenile under 16 years of age.

காறடி, மருக்காரை, emetic nut– Randia dumetorum.

காறட்டுக் கிழங்கு, see காரட்டுக் கிழங்கு.

காறல், காறுதல், tasting bitter; rancidity; 2. தொண்டைக் கரகரப்பு, a teasing sensation felt in the throat; irritation of the throat; 3. காறி யுமிழ்தல், whch see; 4. காறல் கொடி, a medicinal creeper–Arum minutum; 5. காறல் மீன், a silvery sea-fish–Equuala fasciata.

காறற் கத்தரி, காறல் ருசியுள்ள கத்தரி, brinjal with rancid taste.

காறற் கருணை, see காறு கருணை.

காறற் குறட்டை, see குறட்டை.

காறற் கொட்டி, காறல் கொடி, see காறல்; 2. see கண் மாய்க் கிழங்கு

காறன் தைலம், (*Eng.*) ஆளி விதை எண்ணையும், சுண்ணாம்பு நீரும் சேர்ந்த தைலம், a liniment composed of linseed oil and lime water–Carron-oil.

காறாக் கருணை, கருணை, mergui arrow root; elephant yam–Tacca pinnatifida.

காறா வெண்ணெய், காராம் பசு வெண்ணெய், butter from the milk of black-nippled cow.

காறித் துப்பல், see காறி யுமிழ்தல்.

காறி யுமிழ்தல், காறுதல், spitting out with retching; spitting by forcing out phlegm; hawking and spitting phlegm.

காறு கருணை, கருணைக் கிழங்கு, elephant yam with a rancid taste–Typhonium orixense

காறுதல், காறல், retching.

காறை மீன், ஓர் கடல் மீன், palankeen boy's fish–Zeus.

காறைக் குட்டி, ஓர் கடல் மீன், a sea fish–Scolopsis vosmeri.

காறை யெலும்பு, கழுத்துப் பக்க வெலும்பு, பூணாரவெலும்பு, collar bone; clavicle.

காறைச் செம்பு இலை, செம்பு சேர்ந்த ஓர் மூலி. இதனால் இரத்தக் கடுப்பு, மூலம் இவைகள் போம், an unknown drug said to be useful in bleeding piles. It is so called probably of its containing copper.

காற் கடுவன், see கால் கடுவன்; 2. குழந்தைகட்கு காலைச் சுற்றிலும் வரும் சிரங்கு அல்லது கரப்பன், ulcerated leg in children. It is a form of lichen planus rounding each leg in children–Lichen planus ocrea formis.

காற்கட்டு, கால் முறிந்ததற்குக் கட்டும் கட்டு, bandage used in fracture of the leg; 2. பாதத்திற் கிடும் கட்டு, bandage for the foot; 3. காலைக் கட்டுதல், tying the legs together with a string or rope to prevent the patient from moving about as done in fracture or in cases of some dangerous operaton; 4. கால் முடக்கு, contraction of the leg.

காற் கணை, see காற் கோமாரி.

காற் கருணை, see காறு கருணை.

காற் கவசமிடல், காலுக்கு மேல் ஜோடு போடல், wearing stockings as a protection against cold; 2. செருப்புப் போடுதல், wearing shoes.

காற் கவசம், காலுக்கிடும் மேற் சோடு, a knitted woven covering for the foot and the leg–Stocking; 2. பாத ரட்சை, sandals.

காற் காந்தல், காலில் வரும் கட்டி அல்லது புண், abscess or ulcer in the leg or foot.

காற் காய்ப்பு, உள்ளங் கால் அல்லது பாதத்தின் வேறு பாகங்களில் தோல் உராய்தலினால் ஏற்படும் காய்த் தடிப்பு, callousness of the skin of the sole or the skin of other part of the foot.

காற் குடைச்சல், காலில் ஏற்படும் வாத வலி, boring pain due to rheumatism.

காற் குளசு, பாதத்தினுள்ளே அசையும் எலும்புகளின் கூட்டம், the inward juncture of the moveable bones in the feet; 2. கணைக் காற் பொருத்து, the in-step proper with its 7 bones–Tarsus. *C.f.* கைக்குளசு, (*carpus*).

காற் குளசெலும்பு, பாதத்தில் உட்பக்கமுள்ள அசையும் எலும்புகள் அதாவது புறங்காலெலும்பு, bones of the in-step. *i.e.* the middle of the foot or part between the toes and the ankle–Meta tarsus.

காற் கொட்டை, காலுக்கு உதவியாகக் கொடுக்கும் திண்டு அல்லது அணை, something in the shape of bolster or a pad used as a support to the leg.

காற் கோடகி, கக்கரி, cucumber.

காற் கோடன், see கருடப் பச்சை.

காற் கோமாரி, கால் நடைகளுக் கேற்படும் கால் நோய், முக்கியமாய் குளம்பி லுண்டாகும் புண், foot-diseases of the cattle consisting chiefly in soreness of hoofs.

காற் சப்பை, see கால் வாய்க் கோமாரி; 2. காலின் சப்பை, hip; 3. காலின் சப்பை யெலும்பு, hip-bone.

காற் சப்பை நழுகல், சப்பை யெலும்பு இடத்தை விட்டுப் பெயர்தல், dislocation of the hip-bone.

காற் சிகம், நாயுருவி, Indian burr–Achyranthes aspera.

காற் சிப்பு, see காற் சீப்பு.

காற் சிலந்தி, காலில் வரும் சிலந்திப் புண், ulceration of the leg.

காற் சீப்பு, இடுப்புட் சந்தெலும்பு, hip-bone.

காற் சுவடு, பாதத்தின் அழுந்தற் குறி, foot-print. See கால் மிதி.

காற் செபம், தினை, millet.

காற் படம், கால் விரல்களை அடுத்துள்ள உள்ளங்காலின் பாகம், the force-part of the sole of the foot; 2. கால் விரல்களை அடுத்துள்ள புறங்கால் பாகம், the in-step down to the toes.

காற் படை, கோழி, cock; fowl.

காற் பரடு, புறவடி, the upper part of the foot; 2. கணுக் கால், ankle.

காற் பாசம், பருத்தி, cotton–Gossypium arboreum.

காற் பாசியம், see காற் பாசம்.

காற் பிடித்தல், விதை யடித்தல், castrating.

காற் பிடிப்பு, வாதத்தினாலேற்படும் காலின் பிடிப்பு நோய், stiffening of the legs as in rheumatism.

காற் பித்த வெடிப்பு, see கால் வெடிப்பு.

காற் புத்தி, தாளகம், orpiment.

காற் புற்று, பாதம் வீங்கிப் பிறகு வெடித்துப் புரை யுண்டாக்கும் ஓர் புற்று நோய், a peculiar swelling of the foot in which the tubercles beneath the skin burst and leave sinuses.

காற் றகண்டுய்யா மூலி, பிரண்டை, adamant creeper; bone-setter–Vitis quadrangularis.

காற் றகற்றி, வாயு ரேசி, air-pump.

காற் றட்டி, see காற்றடுக்கி.

காற் றடக்கி, நீர்க் குமிழி, bubble in water; 2. துருத்தி, bellows.

காற் றடர்த்தி, காற்றின் நெருக்கம், density of air.

காற்றடுக்கி, (கால்+தடுக்கி) முட்டிக் கால் தட்டி, a knock-kneed person.

காற் றருந்துதல், காற்றைப் புசித்தல், feeding or living on air as snakes or Yogis do.

காற் றமும்பு, காலிற் காணும் வலி வீக்கம், inflamed swelling in the foot or leg; 2. காலில் மேகத்தினால் எழும் புண், lesion in the leg characteristic of syphilis; 3. காலில் ஏற்படும் வடு, scar in the leg.

காற் றறை, காற்று கொண்ட கண் ணறை, air-cell.

காற்றன், துரிசு, blue-vitriol.

காற்றாட வைத்தல், காற்று படும்படி வைத்தல், keeping exposed to the wind or open air; 2. நிழலி லுலர்த்தல், drying in the shade by exposing to the breeze.

காற்றாடா மூலை, காற்று படாத ஒதுக்கிடம், an ill-ventilated secluded place.

காற்றாறப் போடல், நிழலில் உலர்த்தல், see காற்றாட வைத்தல்.

காற்றிகம், see காயாங் குலை.

காற் றிமிர், காலின் திமிர், numbness of the leg; 2. பாத அரிஷம், numbness of the feet.

காற்றிருத்தல், (கால்+திருத்தல்) காலின் எலும்பு நழுகலை அல்லது நரம்புப் பிசகை சீர் திருத்தல், setting right the dislocated bone or the sprain.

காற்றில் வைத்தல், காற்று படும்படி வைத்தல், exposing to the action of air–Aeration.

காற் றிளவல், இளங் காற்று, gentle wind; fine breeze.

காற் றிறுக்கம், காற்றமுக்கம், air-pressure; 2. காற் றடர்த்தி, density of air; 3. காற்றாடா விடம், ill-ventilated place.

காற் றிறுத்தல், காற் றிறுகல், pressure of air.

காற்றிற் கரைந் தறல், காற்றின் ஈரத்தைக் கொண்டு கரைந்து அற்றுப் போதல், a melting or dissolution in the air or in a moist place; the condition of being liquifed as a result of absorption of water from the air–Deliquescence.

காற்றின் சகாயன், நெருப்பு, fire.

காற்று, வாயு, air wind; 2. மூச்சு, breath; 3. அபான வாயு, which see; 4. பிசாசு, evil spirit; devil.

காற்று, பலவிதமாய் அடிக்கும் வாயு, அவையாவன:-

1. ஊதற் காற்று, cold blast; chill breeze.
2. ஊழிக் காற்று, destructive wind.
3. புயற்காற்று, storm.
4. கடுங் காற்று, fierce wind.
5. சூரைக் காற்று, பெருங் காற்று, tempest.
6. சுழல் காற்று, cyclone.
7. பிரசண்ட மாருதம், hurricane.

காற்று கொள்ளல், வாயு கொள்ளல், being affected with gases in the stomach and the intestines; getting flatulent.

காற்றுக் கடுவல், கடுங் காற்று, fierce wind; 2. புயல் காற்று, storm.

காற்றுக் கண், காற்றுக் கண்ணறை, air-cell; 2. பிதுங்கிய கண், gas eye in fishes; 3. முண்டக் கண், goggle-eye.

காற்றுக் கறுப்பு, பேய்க் கோளாறு, demoniacal possession.

காற்றுக் குழாய், காற்று செல்லும் குழல்கள், air tube; air-passage; 2. குரல் வளை, trachea; windpipe.

காற்று சிகிச்சை, காற்றைக் கொண்டு நோய்களைக் கண டித்தல், the therapeutic employment of air–Air-cure.

காற்று சேட்டை, பேய் பிசாசின் தீங்கு, mischief of evil spirits.

காற்றுச் சங்கை, se காற்றுக் கறுப்பு.

காற்று நோவு, ஆடு மாடுகளுக் குண்டாகும் வெக்கை நோய், வாயு கட்டி முதலியன, rinderpast. wind-gall etc. in cattle.

காற்று பரிதல், குதத்தின் வழியாய்க் கெட்ட காற்று வெளிப் படல், generating wind in the stomach; to break wind.

காற்று புகா, காற்றுட் புகாத, impermeable to air; air-tight.

காற்றுபுகா புட்டி, காற்று நுழையாதபடி சடையிட்ட குப்பி, air-tight corked bottle.

காற்று புசித்தல், காற்றை ஆகாரமாக உட்கொள்ளல். இது யோகிகள் செய்வது, "காடே திரிந் தென்ன காற்றே புசித்தென்ன," (பட்ட ணத்தார்), living on air as Yogis do.

காற்றுப் பட்சணீ, வாயு பட்சணி; காற்றை உண்போன், அதாவது யோகி, one living on air *i.e.* a Yogi.

காற்றுப்பு, see காறி யுமிழ்தல்.

காற்றுப் பேத்தை, ஓர் கடல் மீன், a sea-fish–Tetrodon immacuiatus.

காற்றுப்பை, சுவாசப்பை, the lungs.

காற்றுப் போக்கி, காற் றுலாவும்படி வைக்கும் சன்னல், a contrivance for free passage of air- Ventilator; 2. உடம்பின் வாயுவைப் போக்கு மருந்து, a medicine which relieves flatulence- Carminative.

காற்றுப் போதல், see காற்று பரிதல்,

காற்று மாரியாயி, கிரந்திப் புண் அல்லது கட்டி, syphilitic node congenital or acquired.

காற்று வாகு, காற் றடிக்குந் திசை, direction of wind; towards wind.

காற்றுவாங்கல் - காற்று வாடையில் இருத்தல் enjoying the breeze.

காற்று வாங்கி, காற்றை வெளிப் படுத்தும் யந்திரம், a machine of pumping the air out - Air pump.See காற்றகற்றி.

காற்று வாட்டம், காற்றடிக்கும் முகம், windward

காற்று வாரி, see காற்றுப் போக்கி,

காற்றுள்ள, காற்றடங்கிய airy.

காற்றொடுக்கம்,காற்று உலவாது ஒடுங்குகை, closeness of wind.

காற்றோட்டம், காற்று நன்றாக உலாவுகை, ventilation, free passage of air.

காற்றோட்டி, see காரத் தொட்டி,

கானகக் கல், கரும் புள்ளிக் கல், a mineral stone of metallic remnants.

கானகக் கறுப்பி,see கருப்பு சித்திர மூலம்.

கானகக் குவடு, மரகதப் பச்சை, emerald stone.

கானகக் குறத்தி, நிலப் பனை, ground- palm- Curculigo orchioides; 2. கொம்புத் தேன், honey collected on the branches of trees.

கானகக் குறத்தி முலைப் பால், தேன், honey.

கானகக் கூபரம்,see கானகக் கூபன்.

கானகக் கூபன், நாகப் பச்சை, இது ஓர் உபரசச் சரக்கு, (In Tamil Medical science) a peculiar green stone forming one of the 120 kinds of natural substances.

கானகக் கோழி, காட்டுக் கோழி,jungle fowl- Gallus sonneratii.

கானகச் சங்கம், நாகர வண்டு, akind of beetle; a creature supposed to carry water to the snake's hole.

கானகச் சத்துரு, வெள்ளீய மணல், tin-ore.

கானகச் சாரங்கம், கலைமான் கொம்பு, stag's horn.

கானகச் சாரி, கோங்கு, golden silk cotton Cochlospermum gossypium.

கானகச் சிப்பி, கிளிஞ்சில், bivalve-shell.

கானகச் சீதம், கரு வண்டு, black beetle; 2, காட்டின் குளிர்ச்சி, chillness in the forest.

கானகச் சீரம், see கருஞ் சீரகம்.

கானகச் சூதம், see ஆமிரம்.

கானகச் சேவகன், எலி, rat; 2, காட்டுப் பன்றி,wild boar.

கானகத் தட்டான், ஓர் வகைச் செவ்வட்டை, tawny red leech.

கானகத்தி, வரகு, quail- eye millet - Panicum miliaceum.

கானகத்தில் சிந்து முட்பாணம், பன்றி முள் porcupine's spine found scattered in the forest.

கானகத்தின் முத்து,ஓர் பூடு, an unknown plant.

கானகத் தீதம், see கானகச் சீதம்.

கானகத் தீயம், see கானகச் சத்துரு.

கானகத்துக் கதிபதி, தூதுவளை, three- lobed nightshade - Solanum trilobatum; 2. சிங்கம், lion.

கானகத்துச் சோதி, சோதி விருட்சம், a forest tree said to be luminous in the dark; burning bush.

கானகத்து நெல்லி, see கரு நெல்லி,

கானகத்துப் புல், see காவட்டம் புல், 2. காட்டுப் புல், forest grass in common.

கானகத்து மா, see காட்டுமா.

கானகத் தும்பி, கரு வண்டு, black beetle.

கானகத்து வெண்பல், கரடி, bear.

கானகத் தூமம், see கற் பாஷணம்,

கானகப் பச்சை, மரகதப் பச்சை, see கானகக் குவடு.

கானகப் புல், see காவட்டம் புல்.

கானக மருக் கொழுந்து, வாசனை யில்லாத காட்டு மருக் கொழுந்து, forest maid's love without fragrance; southern wood.

கானகம்,see கருஞ் சீரகம், 2. கால் நகம், toenail; nail of foot. 3. குறிஞ்சி நிலம், mountainous tract; 4. வஞ்சி மரம், country willow - Salix tetraperma ; 5, பெண்யானை, female elephant; 6, வன மல்லிகை, jungle jasmine- Jasminum auriculatum; 7, சிற்றகத்தி, small sesban - Aeschynomene sesban; 8, காடு, forest wood.

கானகவல்லி, see இருவாட்சி, 2. see காட்டு வல்லி.

கானக வாட்சி, see இருவாட்சி,

கானக விருத்தி, தினை millet.

கானகன் கழுதை, ass.

கானக் குதிரை மரை, கடம்பை, elk; 2. மா மரம், mango tree- Mangifera indica; காட்டுக் குதிரை, wild horse.

கானக் குதிரை மேல் தோல், மாம் பட்டை, the bark of a mango tree.

கானக் குதிரை விதை, கடப்பம் வித்து, the seed of cadamba tree.

கானக் குறத்தி, see கானகக் குறத்தி, 2. வல்லாரல் அதாவது வல்லாரை,Asiatic or Indian pennywort- Hydrocotyle asiatica.

கானக் குறத்தி முலைப் பால், தேன் honey.

கானக் குன்று, வைக் கிராந்த பாஷாணம், a mineral poison.

கானக் கைதை காட்டுத் தாழை, forest screw - pine; 2. நெடு

நாட்டு, globe - flowered nutmeg - Sageraca dalzelli.

கானக் கோழி, காட்டுக் கோழி, grey junglefowl- Gallus soneratii.

கானக் கோழிப் பூ, கானாங் கோழியின் கொண்டை, crest of a guinea fowl; 2. வான் கோழிக் கொண்டை,crest of Turkey- fowl.

கானங் கோழி, see கானக் கோழி, 2. வழுக்கைத் தலைப் பறவை, bald-coot- Fulicaatra.

கான சரம், நாணல், a coarse grass; 2. கொருக்கை, reed.

கானத்தி, (கான் + அத்தி) காட்டத்தி, forest fig tree; 2, காட்டில் முளைக்கும் பூடு, forest plant in common.

கானத் தூபம், see கற் பாஷாணம்.

கானத் தேறு, மஞ்சள், turmeric- Curcumalonga.

கானத்தை, மிளகு, black -pepper.

கான பலை, see கணுப் பாலை.

கானப் பத்திரம், வில்வம், Indian bael–Aegle marmelos.

கானப் பயறு, கொள்ளு, horse - gram.

கானப் பலா, mountain or jungle-jack. See காட்டுப்பலா.

கானப் பாலை, see காட்டுப் பாலை.

கானப் பால், தில்லைப் பால்,tiger's milk spurge.

கானப் பொட்டு,see கபிலப் பொடி.

கான மடக்கு, காட்டு வெக்காலி, partridgepea tree - Anacolosa densiflora.

கான மயிலை, பாய்விரி மூலி, wild ramboutan- Nephelium stipuiaceum; 2. பசலைக் கொடி, Indian spinach- Portulaca.

கான மயில், காட்டு மயில்,wild pea-cock.

கான மல்லி, see காட்டு மல்லிகை.

கான மவ்வல், see காட்டு மல்லிகை.

கான மழை, தேன் honey.

கானமா,காட்டுப் பன்றி, wild pig; 2. See காட்டு மா.

கான முல்லை, see காட்டு மல்லிகை.

கான மூர்த்தி, முட்டை, egg .

கான மௌவல், see காட்டு மல்லிகை.

கானம், வானம் பாடி sky lark; 2. சீந்தில் moon creeper- Menispermum cordifolium; 3. பொன் gold; 4. see எட்டி, 5. துளசி, holy basil- Ocimun sanctum; 6, வாசனை scent ; 7,காடு ,jungle.

கானயம், காட்டு வெக்காலி,see கான மடக்கு.

கான பூகம், கருங் குரங்கு, blackmonkey; 2. காட்டுக் குரங்கு wild monkey.

கான லக்கினி, சிவப்பு சதுரக் கள்ளி. இது சித்தருண்ணு மூலிகைகளில் ஒன்று, red square - spurge- Euphorbia antiquorum. It is one of the drugs generally taken by Siddhars ;2. காட்டுத் தீ, wild - fire; 3, see காடாக்கினி.

கானலாகினி, see கான லக்கினி,

கான லாவனி,see ,இசங்கு.

கான லிந்திரன், கொடி வேலி, Ceylon lead- wort- Plumbago zeylanica.

கான லோடுதல், பேய்த் தேராடல், mirage seen floating before the eyes.

கானல் பேய்த் தேர், mirage; 2. கானல் நீர் heat- wave; heated state of the atmosphere passing from one locality to another; movement of heat or warmth; 3. சூரிய கிரணம், sun's ray; 4, வெளிச்சம், light brightness; 5. காடு forest.

கானல் கன்னி, see காட்டு மருக் கொழுந்து, 2, வன தேவதை, Virgin goddess of the forest.

கானல் நீர்,see கானல்,mirage commonly mistaken in appearance for a sheet of water.

கானல் பலா, see காட்டுப் பலா.

கானல் பால், see கானற் பால்.

கானல் மா, see காட்டு மா.

கானல் மிருகம், கொக்கு மந்தாரை,taperpointed mountain ebony - Bauhinia acuminata; 2. காட்டுப் பன்றி,wild boar; 3. மான்,deer.

கானல் மிளகாய், see ஊசி மிளகாய்.

கானல் முருங்கை, see காட்டு முருங்கை.

கானல் வாகியம், சீரகம், cumin seed- Cuminum cyminum.

கானல் வாழை, see காட்டு வாழை, 2. மலை வாழை, mountain or hill plantain musa superba.

கான வல்லை, see கானவன், 2. see காட்டு முருங்கை.

கானவன், குரங்கு,monkey.

கான வாரணம்,see காட்டுக் கோழி.

கான வாழை, நீர் வாழை, traveller's palm -Ravenala madagas cariensis.

கான விருக்கம், பாதிரி மரம், trumpet flower tree - Bignonia chelanoides; 2. காட்டு மரப் பொது, forest trees in common.

கான விருடி, சிற்றா முட்டி, rose-coloured sticky mallow- pavonia zeylanica.

கானற் கன்னி,see இருப்பவல்.

கானற் குன்று, வைக்கிராந்த பாஷாணம், a mineral poison.

கானற் சலம், see காட்டுப் பலா, 2. see கானல் நீர்,

கானற் பலா, see காட்டுப் பலா.

கானற் பால், see காட்டெருமைப் பால்.

கானற் பீலிதம், தும்பை, Leucas Flower

கானற் பேய்ச்சி, பேய்த் தும்பை, devil leucas - Leucas linifolia.

கானனம், காடு, forest. wood- land.

கானனு சாரி, நன்னாரி, Indian sarsaparilla -Hemidesmis indicus.

கானனு சேதி, நவ்வல் அதாவது நாவல், jaumoon or black plum- eugenia jambolina.

கானாங் கள்ளி,see இலைக் கள்ளி.

கானாங் கீரை, கன்று குட்டி கானா வாழை, calf's grass- Commelina communis.

கானாங் கெளிறு, ஆற்றுக் கெளிற்று மீன், a river fish- Macranes.

கானாங் கெளுத்தி, ஓர் கடல் மீன், a sea - fish known as mackerel - Scomber microlepidotus; 2. கண்ணண்டை புள்ளிகள் வாய்ந்த கெளுத்தி மீன், another species of mackerel with dots near the eyes- Scombar brachysoma; 3. கடற் கெளுத்தி, a kind of tumy fish - Bonito.

கானாங் கோழி, வான் கோழி, turkey-fowl; 2. See காட்டுக் கோழி.

கானாங் கோழை, see கானாங் கீரை.

கானாதி நாதம், 'மகாரம்' the mystic letter 'Ma'.

கானா முசல், புதர்ப் பறவை. இது இரவில் பெருங் கூச்சலிடும். வேகமாகப் பறக்கும்,jungle hare or stone plover- Oedicnemus crepitans. It is so called because it occurs in bushy wilds its long cry heard at nights; it flies very rapidly.

கானா முருங்கை, காட்டு முருங்கை, jungle moringa- Ormocarpum sennoides.

கானா மொச்சை, see காட்டு மொச்சை.

கானாவதி, திப்பிலி, long-pepper- piper longum.

கானா வாழை, கன்று குட்டிப் புல் இதைக் கன்று குட்டி பிரியமாகத் தின்பதால் இதற்குக் கன்று குட்டிக் கானா வாழை என்று சொல்வதுண்டு. கோழிக் கானான் கீரை என்றும் பெயர். இது சாதாரணமாய் நீர்பாயும் நிலங்களின் ஓரங்களில் புற்போல் முளைத்திருக்கும்,இதன் பூ நீலம்,கன்றுக் குட்டி பால் மறக்க இதை ஆகாரமாய் கொடுப்பதுண்டு இதைக் கீரையாகவும் உண்ணலாம், இதை மாவில் துவைத்து பஜ்ஜியைப் போல் உபயோகப்படுத்துவதுண்டு. இதில் மற்றோர் இனமு முண்டு. இதன் பூவும் நீலமாக விருக்கும், இதன் வேர், தலைம யக்கம்,சுரம், பித்தாதிக்கம் முதலியவைகளுக் கும், பாம்பு கடி விஷத் திற்கும் உபயோகமாகும். குழிப் புண்ணும் ஆறி விடும், Blue spiderwort - Commelyna communis alias C.Bengalensis. It literally means forest plantain, but it is called calf's grass;because its leaves are used to feed calves. It is commonly found on the banks of water- courses sending suckers

into the ground like grass.It has bright blue flowers.Young calves are fed with this, when it is found desirable to wean them from their mlik. It is also used as vegetable greens in food. It is mixed with flour and prepared as 'Bajji' There is another species of this, known as Bengalensis or common spiderwort -Commelyna obliqua. It has also bright blue flowers. its root is useful in vertigo. fevers and bilious affections; and it serves as an antidote to snakepoison. It also heals up incurable deep- sores.

கானாவு, காட்டுக் குன்றி, see குன்றி.

கானா வேளை, தை வேளை. a black variety of velai or five-leaved cleome- Gynandropis pentaphylla.

கானாழி, வெள் வங்கம், white lead; tin; 2. (கால்+ நாழி) கால் நாழி அளவு,an Indian measure of capacity i.e 28/4or 7 cubic inches; 3. சென்னை அளவுப் படி அதாவது கால்படி, according to Madras superficial measure,1/4 measure.

கானாழிகை, கால்+நாழிகை) கால் நாழிகை,an Indian 4/24 or 6 minutes.

கானானு சாரி, see கானனு சாரி.

கானான், ஓர் கொடி, an unknown creeper.

கானான் வாழை, see கானா வாழை.

கானான் வேளை,see கானா வேளை.

கானிகம், மணித்தக்காளி, black - berried solunum - Solanum Nigrum.

கானித்தம், see ஏலம்.

கானியமேனிக்கல், see கரும் புள்ளிக்கல்.

கானிருப்பியம், see துவரை

கானிலம் / **கானிலிந்திரன்** } see கானலிந்திரன்.

கானிற்குன்று, வைக்கிராந்த பாஷாணம், a mineral poison.

கானியம், see கக்கரிக் காய், 2.(கான்+ ஈயம்) காட்டில் தோண்டி யெடுக்கும் காரீயம், graphite.

கானெள், காட்டெள், இது காட்டிலும் மலையிலும் தானாகவே விளையும் எள், இது பெரும் பாலும் நாட்டு எள்ளைப் போல் தான் இருக்கும், ஆனால் கொஞ்சம் பெரிது. இதன் மேற்றோல் சாம்பற் கருப்பா யிருக்கும், எண்ணெயைப் போல் ருசிக்கும், இதினின்று எண்ணெயெடுத்து வடதேசத்தில் விளக் கெரிப்பார்கள். இது மிக்க நயம், இனிப்பா யிருக்கும், நாட்டு எள் எண்ணெயைப் போல் சமையலில் உபயோகிப்பார்கள். இதினின்று எடுத்த புண்ணாக்கு கரவை மாடுகளுக்குதவும்,wild gingelly, hill gingelly- Anthemis mysorensis. It resembles closely the gingelly seed, but a little larger in size; the achenes are of a greyish black colour with

its taste oily. Oil is expressed from the seeds and used as common lamp oil in Northern India; and it is very cheap. It is sweet in taste and used like gingelly oil for culinary purposes etc. The cake is given to milk - cows.

கான் சல தாரை,gutter; 2. பூ flower;3.காடு, desert; jungle ;4. வாய்க் கால்,channel; 5, வாசனை, fragrance; 6.ஆல், banyan tree; 7. கன்னி girl.

கான் குடம் - நறும் பிசின் fragrant gum or resin கான்குடோ -see கான்குடம்.

கான்படு திரவியம், காட்டி லுண்டாகும் அருமையான பொருட்கள், rare products found in the forest. See காடுபடு திரவியம்.

கான் புலி, காட்டுப் பூனை,wild cat.

கான் மரம், ஆல மரம், banyan tree: 2. காட்டு மரம் forest tree in general.

கான் மலைப் பட்சி, மீனம்பர், ambergiris.

கான் மா, காட்டுப் பன்றி, wild boar; 2. பன்றிப் புடல், shrot snake - gourd- Trichosanthes nervifolia.

கான் மிரம், காசுமீரம், Kashmir.

கான் முகல், see காட்டு மல்லிகை.

கான்யாறு, காட்டாறு, jungle river.

கான்யாற்று நீர்,முல்லை நிலத் தாறு, river in a sylvan tract.

கான்றருகன், பாதிரி மரம்,trumpet-flowertree- Stereospermum chelonoides.

கான்றல், கக்குதல்,ejecting from the mouth; 2. வாந்தி செய்தல், vomiting; 3.காறித் துப்பல், coughing and ejecting phlegem; retching and spitting;4. கொப் பளித்தல்,gargling.

கான்றியம்,see காந்தல்,2. உஷ் ணம்,heat.

கான்றை, ஓர் முட் செடி, an unknown thorny shrub